Registered No. M. 5068

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ மார்கழிமீ 13௳ 27—12—1948 ஹிஜ்ரி 1368 ஸபர்மீ 25௳ திங்கட்கிழமை } இதழ் 45

## காங்கிரஸ் மந்திரிகள் - நிர்வாகம் - மக்கள்.

—(கனம் டாக்டர் பாலகிருஷ்ண கேஸ்கர். விளம்பர இலாகா உதவி மந்திரி.)—

[மந்திரி சபையில் சேருவதற்கு முன்னால் டாக்டர் பாலகிருஷ்ண கேஸ்கரால் எழுதப்பட்ட கீழ்வரும கட்டுரை நாட்டை இன்று எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகளை தெளிவுபடுததுகின்றது. ஆகையால் அதை பிரசுரிக்கிறோம். —ஆசிரியர்.]

அதிகாரமாற்றம் நடந்தேறி சரித்திரத்திலேயே முதல் தடவையாக இந்தியா தன்னைத்தானே நிர்வகிக்கின்றது. இருந்தும் நமக்கு பூரண சந்தோஷமில்லை. பிரிவினையால் அது குறைந்துவிட்டது. மேலும் சுதந்திரமே இன்னும் பூர்த்தியாகவில்லை. அதிலுள்ள குறைகளை சொல்லிக்கொண்டிருப்பதால் பலனில்லை. கிடைத்த சுதந்திரத்தை பிரயோஜனப் படுத்திக்கொண்டு நம் லட்சியங்களை சீக்கிரம் அடைய முயற்சிப்பதே நன்மை பயக்கும்.

1942-ல் போராட்டத்துக்குப் பிறகு 1946-ல் காங்கிரஸ் மந்திரிசபைகள் அமைந்தன. சுதந்திரப் போராட்டம் நடக்கையில் மந்திரிசபைகளை ஏற்பதென்பது சுதந்திரத்தை நோக்கி எடுத்துவைக்கப்படும் ஒரு அடியாகவேயிருக்குமென்று அன்று நாம் அறிவித்திருந்தோம். நாம் அறிவித்தது உண்மையா இல்லையாவென்று அன்றிலிருந்து மக்கள் கூர்ந்து கவனித்து வருகின்றனர். நெருக்கடியான சமயத்தில் காங்கிரஸ் மந்திரி சபைகளை ஏற்றுக்கொண்டது. யுத்தத்தினால் பொருளாதார அமைப்பு குலைந்து நாட்டில் பஞ்சமும் பட்டினியும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. கட்டுப்பாடுகள் பொருளாதார சீரமைப்பின் குரல்வளையை நெறித்துக்கொண்டிருந்தன.

உணவும் உடையும் தங்களுக்கு கிடைத்து கள்ள மார்க்கெட்டும் லஞ்ச ஊழலும் ஒழிந்து நாட்டின் சுபிட்சத்துக்கு அவசியமான நிர்மாண திட்டங்கள் நடைமுறைக்கு வரவேண்டுமென்று பொது ஜனங்கள் கேட்டுவந்தனர். ஆனால் அரசியல் சூழ்ச்சியான வகுப்புக் கலவரங்கள் உச்சக்கட்டத்தை யடைந்து அதனால் நிலைமை மேலும் படுமோசமடைந்துவிட்டது

பொது ஜனங்களின் நம்பிக்கைப் பெற்ற மந்திரி சபைகள் ஒழுக்கங்கெட்ட அதிகாரிகளை நீக்கி அவர்களுக்குப் பதிலாக நேர்மையுள்ள அதிகாரிகளை நியமிக்குமென்ற நம்பியிருந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமே ஏற்பட்டதென்பதை மறுக்கமுடியாது. காங்கிரஸ் திட்டங்கள் இன்னும் பூர்த்தியாக வில்லையென்ற சாக்குப் போக்குகளால் நாம் தட்டிக்கழித்து விடுவதற்கில்லை அடிப்படை பிரச்னைகளை தீர்ப்பதற்கு உண்மையாக முயற்சிக்கப்படவில்லை யென்றும் பழைய நிர்வாகயந்திரத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை யென்றும் பொதுஜனங்கள் நினைக்கின்றனர்

லஞ்சம் வாங்கும் அதிகாரிகள் இன்றைக்கும் பதவிகளிலிருந்தேவருகின்றனர். சீக்கிரத்தில் அவர்கள் விலக்கப்படுவரென்று நம்புவதற்குமில்லை. காங்கிரஸின் தேசீய போராட்டத்தை நசுக்குவதில் தீவிரமாயிருந்த அதிகாரிகளுக்கே பதவியும் உயர்த்தப்பட்டிருக்கிறது ரேஷன் முறையில் குறைபாடுகள் நிறைந்திருக்கின்றன. நடந்தேறிய அரசியல் புரட்சிகள் மிக முக்கியமானவை யென்பது உண்மையே ஆயினும் உணவு, உடைமுதலிய வாழ்க்கை தேவைகளுடனேயே பெரிதும் சம்பந்தப்பட்டிருக்கும் பொதுமக்கள் அதைக்கொண்டே மாறுதல்களை அளவிடமுடியுமென்பது வெளிப்படை.

பழைய முதலாளித்துவ நிர்வாக இபந்திரத்தை உடனடியாக யாற்றியமைப்பது சாத்தியமாக இருக்க

வில்லை. அதிலுள்ள கஷ்டங்கள் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டப்படவுமில்லை. இந்தியாவில் யூனியன்ஜாக் கொடிபறந்து கொண்டிருப்பதாகவும் பிரிட்டிஷ் ராணுவம் இருந்துவருவதாகவும் வரம்புக்குட்பட்ட சில அக்கிரமங்களே மந்திரி சபைகளுக்கிருந்து வருவதாகவுமே இந்தியர்கள் நினைத்தனர். ஆனாலும் நம்முடைய மந்திரிகள் திருப்தி யளிக்கும்வரையில் பொது ஜனங்களுக்கு பதிலளிக்கவில்லை. உண்மையாகவே தமக்கு எவ்வித அதிகாரங்களும் கிடைக்கவில்லை யென்று நினைத்துக்கொண்டிருந்த பொதுமக்களும் நம்முடைய சாக்குப் போக்குக்களை சகித்தார்கள்.

இன்று மந்திரி சபைகளுக்கு சுதந்திர மிருக்கின்றது. எது வேண்டுமானாலும் செய்யமுடியும். இன்றைக்கும் பொதஜனங்களின் அடிப்படை பிரச்னைகளை தீர்க்காவிட்டால் நம்மை மந்திரி சபைகளிலிருந்து மக்கள் வெளியேற்றிவிடுவர். தாங்கள் அடைந்த பலன்களைக்கொண்டே பொது ஜனங்கள் காங்கிரஸை யும் காங்கிரஸ் மந்திரி சபைகளையும் மதிப்பிடுவர். சர்க்கார் என்னசெய்யப் போகின்றது என்பதில் அவர்களுக்கு அக்கரையில்லை. சர்க்கார் இன்று என்ன செய்து கொண்டிருக்கின்றது என்பதையே அவர்கள் பார்க்கின்றனர். வரப்போகும் தேர்தல்கள் வரையுள்ள அவகாசம் மிகவும் நெருக்கடியானது. இந்த அவகாசத்தில் தேசத்தை முன்னேற்றி பலப்படுத்த தங்களால் முடியுமென்று மந்திரிசபைகள் நிரூபித்துக் காட்டியாகவேண்டும். இல்லையேல் இந்திய அரசியலில் காங்கிரஸ் வகித்துவரும் மேம்பாட்டை நிலைநிறுத்த முடியாது

காங்கிரஸ் மந்திரிசபைகளில் சுதந்திரப்போராட்டத்தில் முக்கிய பங்கெடுத்துக்கொண்ட ஊழியர்கள் பெரும்பான்மையாக யிருக்கின்றனர். அவர்கள் உண்மையானவர்கள்; பொது நலனுக்கு சேவைசெய்யவே விரும்புகின்றனர்; முன்னேற்றத்துக்காகவே முயலுகின்றனர்; நம்மைவிட அறிவில் சிறந்தவர்கள் அவர்கள் வெற்றியடையாமலிருப்பதற்கு நிச்சயமாக ஏதாவதொரு குறை இருக்கவேண்டும்.

1937 மந்திரி சபைகளுக்குப்பிறகு நடந்ததை கவனித்தால் அவநம்பிக்கையான பதிலே கிடைக்கும் பழைய முதலாளித்துவ நிர்வாகத்தில் மந்திரி சபைகள் எவ்விதமாறுதலும் செய்யவில்லை. மாறுதலுக்கான நம்பிக்கையுமில்லை

நிர்வாகயந்திரம் மந்தமாக சுழலுகின்றது இன்று நாடுஒரு நெருக்கடியான கட்டத்தில் சென்று கொண்டிருக்கிறது. நிலைமை நாளுக்குநாள் மாறுகின்றது. உடனடியான முடிவுகள் தேவை. உடனடியாக அவை நடைமுறையில் வந்தாகவேண்டும்.' இன்றைய மந்தப்போக்கு தற்கொலைக்கு சமமாகும். மக்களுக்கு பலன்தரும் முறையில் நிர்வாகயந்திரத்தை நாம் மாற்றியமைத்தாக வேண்டும். திட்டங்கள் சீக்கிரமே அமுலுக்குவர மந்திரிசபைகள் புதிதாக திறமைசாலிகளை நிர்வாகத்தில் சேர்க்கவேண்டும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்விதிகள், தனிச்சலுகைகள், உரிமைகள் மறைந்தாகவேண்டும். மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக மந்திரிசபைகள் தேர்தல்களை நடத்த வேண்டும். இன்றுகாலத்தை வீணாக்குவதற்கில்லை. சிறியவர்கள், பெரியவர்கள் என்ற பாகுபாடின்றி திறமைசாலிகளிடம் முக்கிய வேலைகள் ஒப்படைக்கப்பட வேண்டும்

தனிப்பட்ட அல்லது கட்சி நோக்கங்களைவிட்டு சமூக புனர்நிர்மாணத்துக்காக போராடவேண்டும். அத்துடன் அதிகாரிகள் மீது மந்திரி சபைகளுக்கு நம்பிக்கையும் அவசியம். அவர்களுடைய வேலைகளுக்கு முட்டுக்கட்டை போடப்படக்கூடாது. தங்கள் மீது மந்திரி சபைக்கு நம்பிக்கை இருப்பதாக எண்ணினால் அவர்கள் சுறுசுறுப்பாக வேலை செய்யமுடியும். இருப்பினும் ஒவ்வொரு விஷயத்திலும் சர்க்கார் அதிகாரிகளையே ஆதரிப்பதுகூடாது. அதிகாரிகள் தவறாமலிருக்கவும் மக்கள் அவர்களை நம்பவும் சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்கும்படி ஆலோசனைகூறி அதை மீறும் அதிகாரிகளை கடுமையாக தண்டிக்கலாம். ஒவ்வொரு அதிகாரியும் ஒரு உண்மையான பிரஜையாகவும் மக்களின் ஊழியனாகவும் இருக்கவேண்டும்.

அதிகாரிகளை மத்திரிசபைகளே நியமித்திருந்தால் மந்திரிசபைகளின் போக்கு சரியாக இருந்திருக்கும். ஆனால் உண்மை இதற்கு நேர்மாறாக விருக்கின்றது. இன்றைய அதிகாரிகள் பழைய ஆட்சியின் சின்னங்கள். 6 ஆயிரம் மைல்களுக்கப்பால் உட்கார்ந்திருந்த சர்க்கார் அதிகாரிகளிடம் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டிய நிலையிலிருந்தது. கண்காணிக்க அதனால் முடியவில்லை. இன்று பெருமளவுக்கு அதிகாரங்கள் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அதிகாரிகளை சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாகச் செய்ய வேண்டியிருக்கிறது. உதாரணமாக பங்கீடு அதிகாரிகள் மற்றவர்களைவிட கடுமையாக ரேஷன் விதிகளை அனுசரித்து நடக்கவேண்டும். பிரிட்டிஷ் அரசர் பிரஜைகளை கட்டுப்படுத்தும் விதிகளுக்கெல்லாம் கட்டுப்பட்டே நடக்கிறார். லஞ்சம் வாங்குபவர்களும் பழைய போக்கிலே போய்க்கொண்டிருக்கும் அதிகாரிகளும் உடனடியாக நீக்கப்படவேண்டும்,

மந்திரி சபைகளிலும் குறைகளிருக்கின்றன. ஒரு முறை மந்திரிப்பதவிக்கு வந்துவிட்ட ஒருவர் குற்றம் சாட்டப்படாத அல்லது இறந்து போகாதவரை மந்திரியாகவே இருந்து வருகிறார். இது சரியல்ல ஒருகுறிப்பிட்ட லட்சியத்துக்காகவே மந்திரிகள் நிய

# இந்திய தேசீய காங்கிரஸ் தலைவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | பம்பாய் | 1885 | W. C. பானர்ஜீ |
| 2 | கல்கத்தா | 1886 | தாதாபாய் நவ்ரோஜி |
| 3 | சென்னை | 1887 | பத்ருத்தீன் தையாப்ஜி |
| 4 | அலஹாபாத் | 1888 | ஜார்ஜ்யூல் |
| 5 | பம்பாய் | 1889 | ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் |
| 6 | கல்கத்தா | 1890 | ஸர். P. M. மேத்தா |
| 7 | நாகபுரி | 1891 | ஸ்ரீ ஆனந்தாசார்லு |
| 8 | அலஹாபாத் | 1992 | W C பானர்ஜி |
| 9 | லாஹுர் | 1893 | தாதாபாய் நவ்ரோஜி |
| 10 | சென்னை | 1894 | ஆல்பிரட்வெப் |
| 11 | பூனா | 1895 | சுரேந்திரநாத் பானர்ஜீ |
| 12 | கல்கத்தா | 1896 | M. ரஹ்மதுல்லா சியானி |
| 13 | அமராவதி | 1897 | ஸ்ரீ சங்கரன் நாயர் |
| 14 | சென்னை | 1898 | ஆனந்தமோகன் போஸ் |
| 15 | லக்னோ | 1899 | ஸ்ரீ R. C. டட் |
| 16 | லாஹுர் | 1900 | ஸ்ரீ N. G. சந்திரவர்க்கர் |
| 17 | கல்கத்தா | 1901 | D. E. வாச்சா |
| 18 | அஹமதாபாத் | 1902 | சுரேந்திரநாத் பானர்ஜீ |
| 19 | சென்னை | 1903 | ஸ்ரீலால்மோஹன் கோஸ் |
| 20 | பம்பாய் | 1904 | ஸர் ஹென்றி காட்டன் |
| 21 | காசி | 1905 | கோபால கிருஷ்ணகோ- |
| 22 | கல்கத்தா | 1906 | தாதாபாய்நவ்ரோஜி (கலே |
| 23 | சூரத் | 1907 | ஸ்ரீராஷ்பிஹாரி கோஷ் |
| 24 | சென்னை | 1908 | ,, |
| 25 | லாஹுர் | 1909 | பண்டிதமதன் மோஹன் மாளவியா |
| 26 | அலஹாபாத் | 1910 | ஸர் வில்லியப் வெட்டர்- |
| 27 | கல்கத்தா | 1911 | பிஷன் நாராயண்தார் (பர்ன் |
| 28 | பாட்னா | 1912 | ஸ்ரீ R. N. மதுாகர் |
| 29 | கராச்சி | 913 | நவாப் ஸையத் முஹமத் |
| 30 | சென்னை | 1914 | ஸ்ரீ பூபேந்திரநாத் பாஸு |
| 31 | பம்பாய் | 1915 | ஸ்ரீ S. P. சின்ஹா |
| 32 | லக்னௌ | 1916 | அம்பிகாசரண்மஜும்தார் |
| 33 | கல்கத்தா | 1917 | ஸ்ரீமதி அன்னி பெஸன்ட் |
| 34 | டெல்லி | 1918 | பண்டித மதன்மோஹன் (மாளவியா |
| 35 | பம்பாய் (ஸ்பெஷல்) | 1918 | மிஸ்டர் ஹஸன் இமாம் |
| 36 | அமிர்தசரஸ் | 1919 | பண்டித மோதிலால்நேரு |
| 37 | நாகபுரி | 1920 | ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் |
| 38 | கல்கத்தா (ஸ்பெஷல்) | 1920 | லாலா லஜபதிராய் |
| 39 | அகமதாபாத் | 1921 | ஹகீம் அஜ்மல்கான் |
| 40 | கயா | 1922 | ஸ்ரீ சித்தரஞ்சனதாஸ் |
| 41 | காக்கினடா | 1923 | மௌலானாமுஹம்மதலி |
| 42 | டில்லி (ஸ்பெஷல்) | 1923 | மௌலானா அபுல்கலாம்ஆஸாத் |
| 43 | பெல்காம் | 1924 | மகாத்மா காந்திஜீ |
| 44 | கான்பூர் | 1925 | ஸ்ரீமதி சரோஜினி நாயுடு |
| 43 | கோஹாத்தி | 1926 | S ஸ்ரீநிவாஸய்யங்கார் |
| 46 | சென்னை | 1927 | டாக்டர் அன்ஸாரி |
| 57 | கல்கத்தா | 1928 | பண்டித மோதிலால் நேரு |
| 48 | லாஹுர் | 1929 | பண்டித ஜவஹர்லால் நேரு |
| 49 | கராச்சி | 1931 | சர்தார் வல்லபாய் படேல் |
| 50 | டில்லி | 1932 | சேட் ரஞ் சோட்லால் |
| 51 | கல்கத்தா | 1933 | பண்டிட் மதன் மோஹன் மாளவியா |
| 52 | பம்பாய் | 1934 | பாபு ராஜேந்திர பிரஸாத் |
| 53 | லக்னோ | 1936 | பண்டித ஜவஹர்லால் நேரு |
| 54 | பைஜ்பூர் | 1937 | ,, |
| 55 | ஹரிபுரா | 1938 | சுபாஷ் சந்திரபோஸ்- |
| 56 | திரிபுரா | 1939 | ,, (ராஜினமா) (பிறகு ராஜன் பாபு) |
| 57 | ராம்கார் | 1940-46 | மௌலானா அபுல்கலாம். ஆஸாத் |
| 58 | | 1946 | பண்டிட்ஜவஹர்லால்நேரு |
| 56 | மீரட் | 1946 47 | ஆசாரிய கிருபளானி- (ராஜிநாமா) |
| 60 | | 1947 | டாக்டர் ராஜேந்திரபிரஸாத் |
| 61 | ஜெய்ப்பூர் | 1948 | டாக்டர் பட்டாபி சீதா- ராமையா, |

மிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட காலத்துக்குள் குறிப்பிட்டவேலையை பூர்த்திசெய்ய முடியாதவர்கள் வெளியேறிவிடுவதுதான முறை. இதை அடிப்படை கொள்கையாகக் கொள்ளவேண்டும். மந்திரியாக இருப்பதற்குவேண்டிய தகுதியை அவருடைய சாதனையைக் கொண்டுதான் நிர்ணயிக்கமுடியும்.

மேலும் ஒரு மந்திரியிடம் அநேக இலாகாக்கள் இருப்பது சரியல்ல ஒருமந்திரியிடம் ஒரே இலாகாதான் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நல்லமுறையில் நிர்வகிக்கமுடியும். நாட்டின் சூழ்நிலையை மாற்றுவதற்கு மந்திரிசபைகள் பழைய போக்கை மாற்றிக்கொள்ள வேண்டியதவசியம்.

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 27—12—’48 திங்கட்கிழமை { இதழ் 45


## ராஷ்டிரபதியின் தலைமையுரை.

—:0:—

இவ்வருஷம் ஜெய்பூரில் முற்றிலும் புதியதொரு சூழ்நிலையில், காங்கிரஸ் மஹாசபை கூடிக்கலைந்தது. அடிமை நாட்டில் சுதந்திரத்துக்காக போராடும் ஸ்தாபனமாக இருந்தவரை, காங்கிரஸ் கூட்டங்களில், நிகழ்ந்துவந்த ஆவேசம் நிறைந்த சொற்பொழிவுகள் இவ்வருஷம் நிகழவில்லை நாட்டின் விடுதலைக்குப் பிறகு நெருப்பைக் கக்கும் பிரசங்கங்கள் அவசியமுமில்லை. பல நூற்றுண்டுகள் அடிமையாயிருந்து, விடுதலை பெற்ற ஒரு நாட்டில், அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்குமிடையே பிளவு ஏற்படுவது அசாதாரணமல்ல. அதைப் போக்க வேண்டியது காங்கிரஸின் வேலை. அதற்கு உறுதியும் பொறுமையும் தான் தேவை எனவே புதிய ராஷ்டிரபதியின் தலைமையுரையில் உறுதியும், பொறுமையும் அபரிமிதமாயிருப்பதில் ஆச்சரியமில்லை.

இன்றைய பிரச்னைகளின் மூலக் காரணங்களைக் கண்டறிந்த ஒரு சிறந்த அரசியல் வாதியின் தீர்க்க தரிசனம், அவர் பேச்சில் காணப்படுகின்றது. அரசாங்கத்துக்கிருந்துவரும் கஷ்டங்களை ஒப்புக்கொண்டதுடன் நிற்காமல், மக்களுடைய துன்பங்களையும் சுட்டிக்காட்டி, அவற்றைப் பரிகரிப்பதற்கு யோசனைகளும் எடுத்துக்காட்டினர்.

இன்றையபிரச்னைகள் உள்நாட்டு, வெளிநாட்டு பிரச்னைகளென இருவகையானவை. வெளிநாடுகள் சம்மந்தப்பட்டவரை சர்ச்சையில்லை இந்தியா எந்தக் கோஷ்டியுடனும் சேராமல், ஜனநாயகத்துக்காக பாடுபடும் சக்திகளுடன் ஒத்துழைக்குமென்று டாக்டர் பட்டாபி தெளிவாக்கிவிட்டார்.

உள்நாட்டுப் பிரச்னைகளில் அநேக சிக்கல்கள் இருக்கின்றன. அகாலிகளின் தவருன போக்கை எடுத்துக்காட்டி, மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சியின் அமைப்புக்கு கூட்டுத்தொகுதி அவசியமென்பதை வற்புறுத்தினர்.

நாட்டின் பொது பாஷை குறித்துப் பேசுகையில், சூழ்நிலையை யொட்டி, இயற்கையாகவே வளர்ச்சியடைவது தான் பொது பாஷை; திணிக்கப்படுவதல்ல. சமஸ்கிருதம் நிறைந்த ஹிந்தியோ, அல்லது, அரபு பாரசீகம் கலந்த உருதுவோ தேசத்தின் பொது பாஷை ஆகமுடியாது மக்களால் சகஜமாகப் பேசப்படும் பாஷையே, தேசியபாஷை யென்று அவர் வெளியிட்ட அபிப்பிராயம், அவரது பாரபட்சமற்ற தன்மைக்கும், தயக்க மின்மைக்கும் ஒரு எடுத்துக் காட்டாகும்.

பாஷாவாரி மாகாணப் பிரிவினை விஷயத்தில் அரசியல் நிர்ணய சபைக் கமிஷன் சமர்ப்பித்த ரிப்போர்ட்டை, அப்படியே அங்கீகரித்து விடாமல், பிரச்னையை பரிசீலிப்பதற்கென்று, ஒரு கமிட்டியை அமைத்தது, மாகாணப் பித்து தலைதூக்கி யிருக்கும் இன்றைய நிலைமையில், செய்யப்பட்ட சிறந்த முடிவாகும்.

காங்கிரஸின் எதிர்காலம் பற்றி முடிவான திட்டமெதுவும் சமர்ப்பிக்க வில்லையாயினும், அதில் முழு கவனத்தையும் செலுத்தி யிருக்கிறு ரென்பது உண்மை. தலைமையுரையில் அதைவிட அதிகமாய் ஒன்றும் செய்திருக்க முடியாது. சர்க்காருக்கும் பொது ஜனங்களுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்தும் ஏஜென்ஸியாக காங்கிரஸ் இருக்க வேண்டுமென்று விரும்பினுலும், சர்க்காரிலுள்ள குறைகளை திரையிட்டு, மூடிவிட்டு, சர்க்காரை ஆதரித்துக் கொண்டிருப்பதையும் அவர் விரும்பவில்லை இல்லையேல், அவர் ராமராஜ்யம் ஏற்பட வேண்டுமென்று வற்புறுத்தியோ, தொழிலாளிகள், விவசாயிகள், கிராமவாசிகள், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பரிந்து பேசியோ, நிர்வாகத்தில் ஒழுக்கமின்மையும், லஞ்சமும் தாண்டவமாடுவதை கண்டித்திருக்கவோ முடியாது. ஏழைகளின் நடுவே சென்று காங்கிரஸ் ஊழியர்கள் வேலை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினர். அளித்த வாக்குறுதிகளைப் பூர்த்தி செய்ய, ஒரு தலைமுறைவரை காத்திருக்கும்படி, மக்களிடம் சொல்ல முடியாதென்று காங்கிரஸ் ஊழியர்களையும், அரசாங்கத்தையும் எச்சரித்தார். கிராம முன்னேற்றம், உற்பத்தி பெருக்கம் சம்மந்தப்பட்ட முக்கிய திட்டங்கள், வெற்றியடையாமல் போய் விட்டதை பிரஸ்தாபித்ததிலிருந்து, அரசாங்கமும், காங்கிரஸும் ஒன்றுபட்டு, புதிய நிலைமைக்கு ஏற்ற முறையில், புதிய திட்டங்களை உருவாக்கி, அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்ற அவருடைய அபிப்பிராயம் வெளியாகின்றது. கிராமக் கைத்தொழில் குறித்து, ஜப்

# நிர்மலா.

மோஹன் :— நிர்மலாவின் கல்யாணகாரியத்தை தாமதிப்பதற்கில்லை. சீக்கிரத்தில் முடிந்துவிடவேண்டும்.

லலிதா :—மாப்பிள்ளை வீட்டில் எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டார்கள் நாளும் பார்த்துவிட்டார்களாம். நம் நிர்மலாவுக்கு பொருத்தமான இடந்தான்.

மோஹன் :—அவர்கள் நாள் பார்த்தாலென்ன? நிர்மலாவை சுகுமாறுக்கு கொடுக்க எனக்கு இஷ்டமில்லை.

லலிதா :—இஷ்டமில்லையா! என்ன பேச்சு இது? நிச்சயார்த்தம் நடந்து கல்யாணம் நடக்காவிட்டால் ஊர் ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்; நிர்மலாவைப்பற்றி கண்டவர்கள் கண்டபடி பேசமாட்டார்களா?

மோஹன் :—அதெல்லாம் எனக்குத்தெரியும். நீ வாயைமூடிக்கொண்டு பேசாமலிரு. இன்று ராவ்பஹதூர் பாஸ்கரன் தன் பையனுக்கு நிர்மலாவைக் கேட்க வந்திருந்தான். ஒரே பையன்; பணக்கார குடும்பம்.

லலிதா :—பணமிருந்தால் போதுமா! பையன் பிரயோஜனமில்லை. அவனைப் பற்றி பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். நமக்கு மாத்திரம் பத்து குழந்தைகளா? ஒரே பெண். இருப்பதெல்லாம் அவளுக்குத்தானே சேரும் மற்றவர்களின் பணத்தை எதற்காக எதிர்பார்க்க வேண்டும். டாக்டர் சுந்தரம் மாத்திரம் பிச்சைக்காரரா என்ன? சுகுமாரும் டாக்டர் பரீட்சையில் தேறியிருக்கிறான்.

மோஹன் :—உளறாதே! ராவ்பகதூர் பாஸ்கரன் சர்க்காரில் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார்.

லலிதா :—இருந்தால்! அதனால் நமக்கென்ன?

மோஹன் :— பேச்சைப்பூராவும் கேட்க்காமல் தொந்தரவு பண்ணுகிறாயே! லட்சக்கணக்கில் கண்ட்ராக்ட்கள் நடத்துகிறார். யுத்தமோ இன்னும் நீடித்து நடக்கப்போகிறது. ஒரு கண்ட்ராக்டில் நாலைந்து லட்சம் தட்டுவது அவருக்கு இடது கை விளையாட்டு. நமக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தையும் சரிப்படுத்தி விடலாமென்று ராவ்பஹதூர் பாஸ்கரன் ஜாடையாக சொல்லியுமிருக்கிறார்.

லலிதா :—ஆண்டவன் நினைத்தால் அது எப்படியோ சரியாய்விடும். அதற்காக கண்டபடி அலையும் பையனுக்கு நிர்மலாவை கொடுப்பதா? தப்பிலித்தனம் செய்து சமீபத்தில் மதுரையில் பிடிபட்டுமிருக்கிறான். நன்னை மூடிக்கொண்டு கிணற்றில் தள்ளுவதாயிருந்தால் நிர்மலாவை காலேஜுக்கு ஏன் அனுப்பவேண்டுமாம்.

மோஹன் :—பணக்கார வீட்டுப்பிள்ளைகளெல்லாம் சிறுவயதில் அப்படித்தான். கல்யாணமான பிறகு வழிக்கு வந்து விடுவார்கள். நானும் நிர்மலாவை கொடுப்பதற்காக வாக்களித்துவிட்டேன்.

லலிதா :—வாக்களித்துவிட்டீர்களா? என்ன காரியம் செய்தீர்கள்? நாலு லட்சத்திற்கு நிர்மலாவை விற்பதற்காகவா? சுமந்து பெற்ற என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கக்கூடாதா? டாக்டர் சுந்தர் வீட்டார் முகத்தில் விழிக்க வேண்டாமா?

மோஹன் :—அதற்காக நீ கவலைப்படவேண்டியது இல்லை நான் டாக்டர் சுந்தருக்கு விஷயத்தை எழுதி விட்டேன்.

லலிதா :—நிர்மலா பீ ஏ. பரீக்ஷை எழுதியிருக்கிறாள். மஹாத்மா காந்தியை குருவாக பாவிக்கின்றாள். ராவ்பகதூர் பாஸ்கரனோ ஆங்கில அடிவருடி. அங்கு அவள் எப்படி காலந்தள்ளுவாள். அவளுடைய வாழ்க்கையை வீணில் கெடுக்கவேண்டாம்.

---

பானை உதாரணமாக எடுத்துக்காட்டியது, அரசாங்கத்துக்கு அளித்த சிறந்த யோசனையாகும், சுய தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு கிராமக் கைத்தொழில் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே புதிய ராஷ்டிரபதியின் ஆசை.

டாக்டர் பட்டாபி, காங்கிரஸின் எதிர்கால திட்டத்தை சமர்ப்பிக்க வில்லையாயினும், வருங்கால வேலைமுறையை தெளிவாக்கியிருக்கிறார். அவரது ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு, காங்கிரஸ் காரிய கமிட்டி விரிவானதொரு வேலை திட்டத்தை தயாரிக்க முடியும். அம்மாதிரியான தொரு திட்டத்தை நாடு எதிர்பார்க்கின்றது. மக்களின் நம்பிக்கையைப் பெற்று, காங்கிரஸை உயிருடன் வைத்திருப்பதற்கு, அவ்வித திட்டம் மிகவும் அவசியம். ராஷ்டிரபதியின் தலைமையுரையில், திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளிருக்கின்றன. உடனடியான பிரச்னைகளை அணுகுவதில் காட்டிய உறுதியும், தீர்க்க தரிசனமும் போலவே, காங்கிரஸுக்கு புதிய ஊக்கமளித்து பழையபடி பிரகாசிக்கச் செய்வதிலும், ராஷ்டிரபதி டாக்டர் பட்டாபி சீதாராமய்யா கவனத்தை செலுத்துவாரென்று நம்புகிறோம்.

பக்கத்து அறையில் ஏதோ சந்தடி கேட்டது. லலிதா வேலைக்காரியைக் கூப்பிட்டு, "அடி கங்கா! அறையில் பூனை எதையோ உருட்டுகிறது. கொஞ்சம் போய்ப்பார்!" என்று ஆக்ஞாபித்தாள்.

சந்தடி செய்தது பூனையல்ல நிர்மலா அங்கு நின்றுகொண்டு தாயும், தந்தையும் பேசிக்கொண்டதை கேட்டுக்கொண்டிருந்தாள். சம்பாஷணையைக் கேட்டு பீதியடைந்து வெளியே போகும் பொழுது கால் எதையோ ஒன்றை தட்டி விட்டுவிட்டது.

ஃ ஃ ஃ

சுசீலா:—நமஸ்தே! ஓஹோ! விடிந்ததும் விடியாததுமாக எழுத்து வேலையா! நான் கண்டிப்பாகப் பார்ப்பேன். ஏன் மறைக்க வேண்டுமாம்! தலைப்பை படித்துவிட்டேனே! "பெண்களுக்கு கல்வி போதிபதுவீண்" பேஷ்! இரவு ஏதாவது கனவுகண்டாயா?

நிர்மலா:—கனவில்லை. தலைவிதியைப் பார்த்தேன். அதை எழுதியிருககிறேன். இதோ நீயும் படித்துப் பார்.

சுசீலா:— (வாங்கிப்படிக்கிறாள்) "திருமணத்தின்போது பெண்களின் சம்மதத்தைப்பெறாமல் அவர்களுடைய இஷ்டத்தை லட்சியம் செய்யாமல் தங்களுடைய சொந்தலாபத்தைக்கருதி எவனிடம் வேண்டுமானாலும் பிடித்து ஒப்படைத்துவிடும் நீங்கள் அவர்களை ஏன் படிக்க வைக்கிறீர்கள்?"

உன் விஷயத்தில் அப்படியொன்றும் நடந்துவிடவில்லையே! உனக்கு ஏன் இந்தக் கவலை.

நிர்:—அது நேற்றுவரையில். இன்று உலகமே மாறிவிட்டது.

சுசீலா பேசவில்லை. லலிதாவை தலையிலிருந்து கால்வரை உற்று நோக்கினாள்.

சுசீலா:—நான் கவனிக்கவேயில்லை! உண்மையாகவே நீ யாறுதலடைந்திருக்கிறாய். கவலை உன்னிடம் குடிகொண்டிருக்கிறது. வாடிய முகமும், நீர் தேங்கிய கண்களும் எதையோ சொல்லுகின்றன. விஷயத்தை சொல்லு. உனக்காக உயிரையும் கொடுக்கத்தயார்.

தாயும் தகப்பனும் பேசிக்கொண்ட முழு விவரத்தையும் எடுத்துரைத்துவிட்டு கைகுட்டையால் முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்ட நிர்மலாவை சுசீலா கட்டி அணைத்துக்கொண்டாள்.

சுசீலா:—நிர்மலா! பயப்படாதே! அப்படி ஒருக்காலும் நடக்காது. டாக்டர் சுந்தருடைய மகனைப் பற்றி நமக்கு நன்றாகத்தெரியும். அவருடைய குடும்பமே காங்கிரஸ் வாதிகள். உன்னுடைய சம்மதத்தை நானேதான் உன் அம்மாவிடம் அறிவித்தேன். ராவ்பஹதூர் பாஸ்கரனுடைய மகனோ முதல் நம்பர் காலாடி. கண்ணியமான எவரும் அவன் பக்கத்தில் உட்காருவதையும் சகிக்கமாட்டார்கள் அடிமைகள். அவர்கள் நல்லவர்களாய் இருந்தால்தானென்ன? அந்த வீட்டில் நீ ஒரு நாளையும் தள்ள முடியாது.

நிர்மலா:—அதுதான் எனக்கிருக்கும் கவலை. ஆனால் நான் என்ன செய்வதென்று முடிவுசெய்துவிட்டேன். அவர்களுடைய எண்ணங்களை தோற்கடிப்பேன். என்னுடைய எதிர்காலத்தைக் குறித்து முடிவு செய்ய எனக்கு உரிமையுண்டு.

சுசீலா:—என்ன முடிவு செய்திருக்கிறாய். என்னிடம் சொல்லு. நானும் ஏதாவது ஒத்தாசை செய்வேன்.

நிர்மலா:— ஏதாவது என்ன உன்னுடைய பரிபூரண ஒத்தாசை வேண்டும். அப்படியானால் என்னுடைய முடிவைக்கேள்.........

ஃ ஃ ஃ

நாட்டில் அன்னிய சாமான்களின் பகிஷ்காரமும் சத்தியாக்கிரகமும் மும்மரமாய் நடந்துகொண்டிருந்தது. சுதேசி பிரசாரத்துக்காக நகரத்தில் சிறு சிறு கோஷ்டிகளாக கிளம்பும் தொண்டர்கள் மீது தடியடிப்பிரயோகம் செய்து கலைப்பதில் போலீஸ் படை முனைந்திருந்தது. மஹாத்மா காந்தியும் காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். அதைக் கண்டிப்பதற்காக 144 தடை உத்திரவை மீறி ஒரு பெருங்கூட்டம் அன்று கிளம்புவதாயிருந்தது.

காலையில் நிர்மலா தன் தோழியான சுசீலா வீட்டையடைந்தாள்.

சுசீலா:—நான் இரவு முழுவதும் உன்னுடைய முடிவைப்பற்றி சிந்தித்தேன் அதில் கை கால்களுக்கு மட்டுமின்றி உயிருக்கே அபாயம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

நிர்மலா:— அதெல்லாம் சிந்தித்தாய் விட்டது. பாரதத்தாய்க்கு பலி தேவ. மேலும் இந்த நகரத்தில் வாழ்வதை விட சாவதே மேல். தொண்டர்கள் கிளம்பப்போகிறார்கள். இந்தவழியாகத்தான் போவார்கள் உன் அண்ணாவுடைய உடைகள் எங்கே? சீக்கிரமாகக் கொடு.

சுசீலாவின் அண்ணாவுடைய உடைகளணிந்து நிர்மலா இளங்காளையாக காட்சியளித்தாள் அவள் புறப்படும்போது சுசீலாவின் கண்களில் கண்ணீரும் நிர்மலாவின் முகத்தில் புன்னகையும் தேங்கியிருந்தன தடையை மீறும் கூட்டமும் வந்தது. நிர்மலா அதில் கலந்து கொண்டாள். சிறிது தூரம் செல்வதற்குள்

போலீஸ்படை வந்தது. ஈவிரக்கமற்ற தடியடிப் பிரயோகம் ஆரம்பமாயிற்று. அநேக தொண்டர்கள் காயப்பட்டு மூர்ச்சையாய் தரையில் சாய்ந்தார்கள்.

இரண்டு அரசாங்கங்களுக்கிடையே நடக்கும் யுத்தத்திலும் கூட காயமுறும் சிப்பாய்கள் யாரைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் எடுத்துக் கொண்டுபோய் சிகிச்சை செய்வதுண்டு. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியின் சிப்பந்திகள் நிராயுதபாணிகளான அஹிம்ஸா பூர்வமான தங்கள் பிரஜைகளுக்கு அவ்வளவும் செய்யத்தயாராக இருக்கவில்லை இம்மாதிரி சம்பவங்களின் போது காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்வதற்காக காங்கிரஸ் டாக்டர் சுந்தரின் தலைமையில் தற்காலீக ஆஸ்பத்திரி ஒன்றை ஏற்படுத்தியிருந்தது. காங்கிரஸின் ஆம்புலன்ஸ் மோட்டார்கள் வந்தன. காயமுற்ற தொண்டர்கள் எடுத்துச் செல்லபபட்டார்கள்.

டாக்டர் சுந்தர்:— வாலிபனுக்கு சுவாதீனம் வந்ததா?

சுகுமார்:— அப்பா ! வாலிபன் அல்ல! அவளுடைய சட்டையை எடுக்கும்போது அவள் ஒரு பெண் என்பது வெளியாயிற்று.

சுந்தர்:—பெண்ணா ? இரு நானே வருகிறேன், நீ லேடி டாக்டர் பஞ்சுபாஷிணியை உடனே அனுப்பு

ஃ ஃ ஃ

சுந்தர்;— இப்பொழுது நீ குணமடைந்து விட்டாய். ஒருவாரத்தில் போதிய பலம் வந்துவிடும். உன்னுடைய வீட்டு விலாசத்தைச் சொல்லு அவர்களுக்கு செய்தி அனுப்புகிறேன் அவர்கள் வீணில் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

நிர்மலா:— தாங்களும் சின்ன டாக்டரும் எவ்வளவோ அக்கரையுடன் என்னை கவனித்தீர்கள். நான் அதற்காக எப்படி நன்றிசெலுத்தவேன் நான் இனி ஏதாவது வேலைசெய்ய முடியுமென்றே நினைக்கிறேன்.

சுந்தர்:— உன்னைப்பார்த்தால் நன்றாய் படித்த பெண்ணாயிருக்கிறாயே அம்மா !

நிர்மலா;— இவ்வருஷம் தான் பி ஏ. பரீட்சை எழுதியிருக்கிறேன்.

சுந்தர்:— அப்படியா ? உன் நம்பர் என்ன ? இன்று பத்திரிகையில் பரீட்டை முடிவுகள் வெளியாயிருக்கின்றன.

நிர்மலா;— இருநூற்று இருபத்திரண்டு.

சுந்தர்:— சுகுமார் ! இன்றைய பத்திரிகையை இப்படிக்கொண்டுவா

[சுகுமாரன் பத்திரிகையை கொடுத்துவிட்டுப் போய்விட்டான் ]

சுந்தர்:— இதோ ! 222 நீ பரீட்சையில் தேறிவிட்டாய் சரி உன்னுடைய வீட்டு விலாசம்?

## புத்தாண்டு.

(ஷேக்பீர், கல்லிடைக்குறிச்சி.)

புத்தம் புது மலர்கள் பூக்குமே புள்ளினங்கள்
சித்தம் மகிழ்ந்தெங்கும் ஆர்க்குமே-புத்தாண்டு
பூத்ததால் பன்னலங்கள் பூமீது ஆக்குமே
காத்திடர் நீக்குமே காண்பீர்

இந்நாடு இந்தியரும் எய்தியநற்
சுதந்திரத்தை என்றும் காக்க

இந்நாடு பொன்னாடாய்
இன்பமெலாம் என்னாளும் ஈந்துநிற்க

இந்நாட்டார் காந்திமகான் நெறி முறைகள்
கைக்கொண்டு இணைந் தொன்றாக

இந்நாட்டின் உயர்வுக்கு உழைத்திடவே
இறையருள இறைஞ்சுவோமே

நிர்மலா:— என்னுடைய வீட்டு விலாசமா ? இன்று சமூகத்தில் நடப்பது தங்களுக்குத் தெரிந்தேயிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் பி ஏ படித்த ஒரு பெண் தன் விலாசத்தைச் சொல்லத் தயங்கினால் பலவித சந்தேகங்களுக்கு இடமேற்படு மென்பது எனக்குத்தெரியும் ஆகையால் தங்களிடம் உள்ளதை உள்ளபடியே சொல்லிவிட ஆசைப்படுகிறேன்.

சுந்தர்:— விசித்திரமான சம்பவம் ! மகளே ! அந்த டாக்டர் சுந்தர் நானேதான் உனக்கு சேவை செய்துவந்த சுகுமாரன்தான் என் பையன். உலகத்தில் சில சம்பவங்கள் விசித்திரமாக நடந்துவிடுகின்றன. இப்பொழுது என்ன செய்வதென்று தோன்றவில்லை (நிர்மலா தலைகுனிந்தாள்)

நிர்மலா:— என்னுடைய தோழியான அமர்நாத் வெள்ளி வியாபாரியின் மகளை தயவு செய்து கூப்பிடுங்கள்.

சுந்தா:— அவர்களை எனக்குத் தெரியும் அழைக்கிறேன். அதிருக்கட்டும் உன்னுடைய தகப்பனார் உன் விஷயத்தில் முதலில் செய்திருந்த முடிவு உனக்கு சம்மதமா வென்பதைச் சொல்லு

[நிர்மலா லஜ்ஜையுடன் குனிந்து நின்றாள்]

சுந்தர்:— (புன்சிரிப்புடன்) சுகுமார்! இப்படி வா. அடிக்கடி பிரஸ்தாபித்து உன் தங்கை உன்னை நையாண்டி செய்வாளே அந்த லாலா மோஹன்தாஸின் மகள் நிர்மலா இவள்தான். என்ன ?

தேசீய தலைவர்கள் ஆசீர்வதிக்க அடுத்த மாதம் நிர்மலாவுக்கும் சுகுமாருக்கும் திருமணம் நடந்தேறியது.

# டச்சு ஏகாதிபத்திய வெறியாட்டம்.

சென்ற யுத்தத்தில் ஜப்பானிய வெற்றிகளால் தென்கிழக்கு ஆசியாவில் ஹாலந்து ஏகாதிபத்தியம் மறைந்தபோது ஹாலந்து ஜெர்மனிக்கு அடிமைப் பட்டுக்கிடந்தது. தலைவர்கள் வெளியில் இருந்து கொண்டு ஹாலந்த சுதந்திரத்துக்காக போராடிக் கொண்டிருந்தார்கள். யுத்த முடிவில் ஜப்பானியத் தோல்வியால் இந்தோனேஷ்யாவும் ஜெர்மனியின் வீழ்ச்சியால் ஹாலந்தும் விடுதலை பெற்றன. ஆனால் 'சுதந்திரம்' 'ஜனநாயகம்' என்று ஓயாமல் பறை சாற்றி வந்த பிரிட்டன் இந்தோனேஷ்யாவில் படைகளை இறக்க ஹாலந்துக்கு அனுமதியளிப்பதில் கொஞ்சமும் தயங்கவில்லை. ஆறு வருஷங்கள் வரை சுதந்திரத்துக்காக போராடிவந்த அதே ஹாலந்து இந்தோனேஷிய சுதந்திரத்தை பறிக்கும் படையெடுப்பாளனாக மாறி பாதிக்குமேற்பட்ட இந்தோனேஷியர் பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொண்டுவிட்டது. இந்திய, ஆஸ்டிரேலிய நாடுகளின் பிரேரணையால் ஐக்கியநாட்டு ஸ்தாபனம் யுத்தத்தை நிறுத்தி சமரசம் செய்து வைப்பதற்காக ஒரு கமிஷனையும் இந்தோனேஷியாவுக்கு அனுப்பியிருந்தது. அந்தக் கமிஷன் வெளியிட்ட ரிப்போர்ட்டை ஒருவிதத்தில் ஹாலந்துக்கு எதிராக ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தின் குற்றப் பத்திரிகை யென்றே சொல்லவேண்டும். இந்தோனேஷியக் குடியரசை ஒடுக்குவதற்காக பொருளாதார நடவடிக்கையில் இறங்கி யிருக்கிறதென்று அதில் ஹாலந்து மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இருப்பினும் பெர்லின், பாலஸ்தீன் பிரச்சனைகள்பற்றி வீண் வாதங்களில் லயித்திருந்த ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் பொதுசபைக்கூட்டம் இந்தோனேஷியப்பிரச்னையில் கவனம் செலுத்தாமலேயே கலைந்துவிட்டது. இன்று பந்தோபஸ்து சபையில் பிரச்னை சமர்ப்பிக்கப்பட விருந்த சமயத்தில் இந்தியத் தலைவர்களுடன் கலந்துபேச இந்தோனேஷியத் தலைவர்கள் புது டெல்லிக்கு வந்து கொண்டிருந்த வேளையில் திடீரென்று ஹாலந்துப்படைகள் தாக்கி இந்தோனேஷியாவை ஆக்ரமித்துக்கொண்டு குடியரசு சர்க்கார் முக்கியஸ்தர்களை கைது செய்திருக்கிறது.

ஹாலந்தின் வெட்கப்படத்தகுந்த இச் செய்கை இந்தியா, ஆஸ்திரேலியா, தென்கிழக்கு ஆசியா முதலிய நாடுகளுக்கு விடுக்கப்பட்ட சவால் என்பது மட்டுமின்றி ஐக்கி நாட்டு ஸ்தாபனத்தின் கௌரவத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் பலமான அடியுமாகும்

தலையிடும்படி ஐக்கியநாட்டுக் கமிஷன் கேட்டுக்கொண்டதற்கு பந்தோபஸ்து சபை யுத்தத்தை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டிருக்கிறதே யொழிய டச்சுப்படைகள் பழைய ஸ்தானங்களுக்கே வாபஸாக வேண்டுமென்று உத்திரவிடவில்லை. பந்தோபஸ்து சபையோ அல்லது ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்திடமோ ராணுவ சக்தியில்லையென்பது வாஸ்தவந்தான் ஆனாலும் தார்மீக சக்தி இருக்கின்றது. அந்தசக்தியை அமெரிக்கா பிரிட்டன் முதலிய ஜனநாயக, ஜனநாயகமற்ற நாடுகள் ஆதரிக்கின்றன. இருந்தும் வெறுக்கத்தகுந்த செய்கையில் இறங்க ஹாலந்துக்கு துணிச்சல் எப்படி ஏற்பட்டதென்று தெரியவில்லை. ஏதோ வொரு சக்தி தட்டிக்கொடுக்காதவரை ஹாலந்து ஒரு ஜனநாயக நாட்டை ஒடுக்கத் துணிந்திருக்காதென்பது நிச்சயம்

சமீபத்தில் இந்தியா, ஆஸ்டிரேலியா, பாகிஸ்தான், நியூஸிலந்து, ரஷ்யா ஆகிய நாடுகளின் ஓட்டுகளால் ஐக்கியநாட்டு ஆசிய பொருளாதார கமிஷனின் உப அங்கத்தினராக நியமனம் பெற்ற இந்தோனேஷியக் குடியரசு சீக்கிரத்தில் ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தில் மெம்பராக சேருவதற்கும் ஏதுவிருந்தது பிறகு தன்னுடைய எண்ணங்கள் நிறைவேறாமல் போய்விடு மென்பதும் தன் ஆதிக்கத்திலிருக்கும் இந்தோனேஷியப் பிரதேசத்திலுள்ள மக்களும் உற்சாகமடைந்து ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முற்பட்டுவிடுவார்களென்பதும் ஹாலந்துக்கும் தெரியும். எனவே ஐக்கிய நாட்டு விதிகளை மீறவேண்டியிருப்பினும் காலத்தைக் கடத்தாமல் ராணுவ பலத்தைக் கொண்டு குடியரசை தகர்த்துவிடும் நோக்கத்துடன் படை யெடுத்திருக்கிறது. ஹாலந்தின் ஆக்ரமிப்பு நடவடிக்கை ஐக்கிய நாட்டு விதிகளுக்கு புறம்பானது ஐக்கியநாட்டு கமிஷன் பதினோறு மாதங்களாக சமரசத்துக்காக முயன்று வருகிறது. போன ஜனவரி மாதத்தில்கூட குடியரசுக்கு எதிராக போலீஸ்நடவடிக்கையை நிறுத்தும்படி ஹாலந்துக்கு பந்தோபஸ்து சபை உத்திரவிட்டிருக்கிறது எனவே ஹாலந்தின் இன்றைய நடவடிக்கை பந்தோபஸ்து சபையின் உத்திரவையும் புறக்கணிப்பதாகும்

இருப்பினும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் ஹாலந்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடுமென்றோ அல்லது பந்தோபஸ்துசபை குடியரசின் பழைய சுதந்திரத்தை மீட்டித்தர முடியுமென்றோ எதிர்பார்க்க முடியாது. பந்தோபஸ்து சபையின் நோக்கம் சிறிய நாடுகளின் சுதந்திரம், ஜனநாயகம், சார்ட்டரின் கொள்கைகளை பாதுகாப்பதல்ல. வல்லரசுகளின் சாம்ராஜ்ய ஆக்கிரமிப்புகளுக்கு, சட்டத்தின் முலாம் பூசி, உளுத்துப்போய் இடிந்து விழுந்துகொண்டிருக்கும் சாம்ராஜ்ய கட்டடத்துக்கு முட்டுக் கொடுப்பதேயாகும். பிரிட்டனும், அமெரிக்காவுமே அதன் ஜீவன்.

இதர் மெம்பர்களில் பெரும் பான்மையினர் டாலர் மோகத்தில் மயங்கியிருப்பவர்களேயாவர் மேலும் இந்தோனேஷ்யாவில் அவர்களுடைய எத்தனையோ கோடி ரூபாய் நலன்களிருக்கின்றன டச்சு ஏகாதிபத்தியத்தின் மறைவு அவர்களுடைய நலன்களுக்கு வைக்கப்படும் முற்றுப்புள்ளியாகவே இருக்கும். இந்நிலையில் அவர்கள் டச்சு ஆக்கிரமிப்பை எப்படி கண்டிக்கமுடியும். வாய்மூலம் பேசினாலும் ஆசிய நாட்டின் மீது ஐரோப்பியநாடு வகிக்கும் ஆதிக்கத்துக்கு இம்மியும் குந்தகம் ஏற்படக்கூடிய முறையில் ஒன்றும் செய்துவிட மாட்டார்கள். இரண்டு வருஷங்களுக்கு முன் துப்பாக்கி முனையால் அடிமைப்படுத்தி இந்தோனேஷிய மக்கள்மீது டச்சு ஏகாதிபத்தியத்தை சுமத்தியது அமெரிக்க டாலர்களும், தளவாடங்களும், பிரிட்டிஷ் படைகளுமல்லவா? பிரிட்டிஷார் டச்சு படைகளுக்கு பயிற்சியளிக்கவில்லையா? லட்சத்தி ஐம்பதினாயிரம் டச்சுத்துருப்புக்கள் இந்தோனேஷ்யா அடைவதற்கும், தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் பிரிட்டன் உதவவில்லையா? ஹாலந்துக்கு எதிராக இந்தோஷியர் செய்த கிளர்ச்சியை பிரிட்டிஷ் படைகள், யுத்தக்கப்பல்கள், ஆகாயவிமானங்கள் அடக்கவில்லையா? டச்சு ஏகாதிபத்தியவாதிகள் அமெரிக்கா கடனாகக் கொடுத்த தளவாடங்களின் உதவியால் நிராயுதபாணிகளான இந்தோனேஷிய மக்களை அடிமைப் படுத்தவில்லையா? இன்றைக்குத் தானென்ன! அமெரிக்க மார்ஷல் திட்டப்படி தரப்பட்ட உதவி சாம்ராஜ்ய நலனுக்காக உபயோகிக்கப் படவில்லை யென்று சொல்லமுடியுமா? மேற்கூறிய உண்மைகளை கவனிக்குமிடத்து பந்தோபஸ்து சபை ஹாலந்துக்கெதிராக நடவடிக்கை எடுக்குமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்!

இந்தியாவுக்கு எப்பொழுதுமே இந்தோனேஷியாவிடம் அனுதாபமுண்டு. இந்தோனேஷியாவை ஆதரித்து இந்திய தேசீய காங்கிரஸும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது இந்தோனேஷியா தென்கிழக்கு ஆசியநாடுகளில் ஒன்று. ஒரு ஐரோப்பியநாடு அதை ஆக்கிரமிக்கும்போது எந்த ஒரு ஆசிய நாடும் கண்டிக்கண்டிக்காமலிருக்க முடியாது ஆனால் ஆசிய பொருளாதார கமிஷனின் இந்தேதோனேஷியாவை மெம்பராகச் சேர்க்கும் பிரச்னையில் நடுநிலைமை வகித்தது மட்டுமின்றி பிரச்னையை ஒத்திபோடவும் பிரயத்தனம் செய்த அமெரிக்காவும், பிரிட்டனும் இன்று மௌனம் சாதிப்பதில் ஆச்சரியமில்லை. பந்தோபஸ்து சபையிடம் இந்தோனேஷியர்களுக்கு நியாயம் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது. பதில் நடவடிக்கை எடுப்பதற்கு ஒரே வழிதான் உண்டு. ஆசிய மக்களின் சுதந்திரத்திற்கெதிராக சாம்ராஜ்ய சக்திகள் ஒன்றாக திரண்டிருப்பதைப் போலவே சுதந்திர ஆசிய நாடுகளனைத்தும் சாம்ராஜ்ய வாதிகளுக்கு எதிராக ஐக்கிய அணி அமைக்கவேண்டும். குடியரசுக்கெதிராக ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதன் விளைவுகள் பயங்கரமாயிருக்குமென்று பண்டிதநேரு எச்சரித்து வந்தார். டச்சு ஏகாதிபத்தியம் தன்னுடைய நோக்கங்களில் ஒருநாளும் வெற்றியடையப் போவதில்லை. சாம்ராஜ்ய முறையின் காலம் முடிவடைந்துவிட்டது. ஆசியாவின் எந்த பாகத்திலும் சாம்ராஜ்ய சக்தி நிலைப்பதற்கில்லை. திரண்டுவரும் சுதந்திர அலையை எவராலும் தடுக்க முடியாது என்று ஹாலந்து ஆக்ரமிப்பில் இறங்கிவிட்ட பிறகும் பண்டிதநேரு எச்சரித்தார்.

உடனடியாக பயனளிக்கத்தக்க உதவி இந்தோனேஷியாவுக்கு செய்ய முடியாவிட்டாலும் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. விளைவுகள் எதுவாயிருப்பினும் டச்சுப்போக்கை நியாயமென்று நாம் ஒப்புக்கொள்வதற்கில்லை.

எந்த ஒரு ஆசிய நாட்டின் பேரிலும் அன்னிய ஆதிக்கம் இருக்கக்கூடாதென்பதே நம் வெளிநாட்டுக் கொள்கை. டச்சுநடவடிக்கைக்கு சீக்கிரத்தில் ஆசியா முழுவதிலும் பதில் நடவடிக்கை தலைதூக்குமென்பது நிச்சயம். அந்நிலையில் நாம் என்ன செய்யவேண்டுமென்பதை சிந்திக்க வேண்டியிருக்கும்.

பண்டித நேருவின் அறிக்கை நம்பிக்கை யூட்டுவதாயிருக்கின்றது அதைவிட தெளிவாகவும் தைரியமாகவும் அறிக்கை வெளியிட முடியாது. ஆயினும் அவருடைய முடிவின் விளைவுகளை இந்தியர்களும் ஆசிய மக்களும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஹாலந்து மீது இந்தியா போர் தொடுக்க முடியாமலிருக்கலாம். ஆயினும் குடியரசுக்கு உதவி செய்ய இதர அநேக வழிகள் இருக்கின்றன. இந்திய தலைமையில் ஆசிய நாடுகளனைத்தும் ஹாலந்துடன் அரசியல் வர்த்தக உறவுகளை அறுத்துக் கொள்ள முடியும். ஹாலந்து கப்பல்களுக்கும் ஆகாய விமானங்களுக்கும் சூயஸ் கால்வாயிலிருந்து சிங்கப்பூர்வரை எங்கும் இடங்கிடைக்காமல் செய்ய முடியும், அத்துடன் டச்சு ஏகாதிபத்தியத்திற்கு தரப்படும் அமெரிக்க மார்ஷல் உதவி நிறுத்தப்படாவிட்டால் கச்சாப் பொருள்கள் சப்ளையை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமென்று அமெரிக்காவையும் எச்சரிக்கலாம். டச்சு ஏகாதிபத்திய வாதிகளுக்கும் அவர்களுடைய ஆதரவாளர்களுக்கும் எதிராக ஆசியநாடுகள் ஐக்கிய அணி அமைப்பதன் மூலமே சில தினங்களுக்குள் சாம்ராஜ்யமூளைகளை திருத்த முடியும். மேலும் இந்தியாவிலிருந்தும், ஆசியாவின் இதர நாடுகளிலிருந்தும் ஆயுதந்தாங்கிய தொண்டர் படைகள் அனுப்புவதும் சாத்தியம். இன்னும் எத்தனையோ முறைகள் அனுசரிக்கலாம். நம்முடைய பிரதம மந்திரி பண்டித நேரு இச்சமயத்தில் சாத்தியமான எல்லா முறைகளையும் உபயோகித்து ஆசியாவின் சுதந்திரக் கிளர்ச்சியை மேலும் பலப்படுத்துவாரென்றும் நம்புகிறோம்.

## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

# நேரு சர்க்காரை பலஹீனப்படுத்தி நாட்டுக்கு தீமை செய்யாதீர்.

## ஐக்கிய முன்னேற்றக் கூட்டத்தில் மௌலானா ஹபீபுர்ரஹ்மான் அறிவுரை.

நிர்மாண நோக்கத்துடன் சுதந்திரத்தை நோக்கி இந்தியர்கள் அடியெடுத்து வைக்காதவரை இந்தியா விடுதலையடைய முடியவில்லை. முன்னால்நடந்த அநேக போராட்டங்கள் வெற்றிபடையாமல் போனதற்கு பலாத்காரத்தால் ஆங்கிலேயர்களை வெளியேற்ற வேண்டுமென்ற நாச எண்ணமிருந்ததும் சுதந்திரத்துக்கு அவசியமான நிர்மாணநோக்கம் இல்லாமல் போனதும்தான் காரணம். பலாத்கார முறையால் எதிர்க்கமுடியாதென்று முதல் முதலாக தென்னாப்பிரிக்காவில் காந்திஜீ எண்ணினார். அஹிம்சையின் அசைக்கமுடியாத சக்தியால் மட்டுமே பலம்வாய்ந்த ஏகாதிபத்யத்தை முறியடிக்க முடியும் என்று தீர்மானித்தார்.

1913-ல் பீஹாரில் சிவில் சட்டமறுப்பு செய்தார். 1919-ல் அஹிம்சை அடிப்படையில் கிலாபத் போராட்டத்தை ஆரம்பிக்கையில் "என்னுடன் ஒத்துழைப்பதாகயிருந்தால் இந்திய விடுதலைக்கு நான் உத்திரவாதமளிப்பேன்" என்று கல்கத்தாவில் காந்திஜீ உறுதி கூறினார். "காந்திஜியின் கொள்கைக்காக நூறுபேர் சிறைசென்ற பிறகு நூற்று ஒன்றாவது மனிதனாக நான் சிறைபுகத்தயார்" என்று அப்பொழுது காங்கிரஸிலிருந்த மிஸ்டர் ஜின்னாகூட கூறியதுண்டு. அஹிம்சை நாட்டுமக்களை ஆகர்ஷித்து நாட்டை விடுவிக்க முடியுமென்று அவரால் நம்பக்கூடவில்லை. சில தினங்கள் சென்றன. "நீங்கள் என் பேச்சைக் கேட்கவேண்டிருக்கும்" என்று மீண்டும் காந்திஜீ அமிர்தசரஸில் வற்புறுத்தினார். அஹிம்சையுடன்கூடவே 'கதர் அணிதல்,' 'நூல் நூற்றல்' 'ஹரிஜனங்களை முன்னேற்றுதல்' இம்மூன்றையும் காந்திஜீ அடிக்கடி சொல்லிவந்தார்.

பிறகு நடந்ததென்ன! காந்திஜியின் அஹிம்சைக் கொள்கைக்காக ஆயிரக்கணக்கான லட்சாதிபதிகள் சிறைபுகுந்தார்கள். அவர்சொல்லிவந்த மூன்று விஷயங்களும் இந்திய பண்பாட்டிலேயே இடம் பெற்றுவிட்டன. கதர் உடுத்துவது கவுரவமாயிற்று. நூல்நூற்பது வயிற்றுக் கொடுமையை தீர்க்க உபாயமாயிற்று. ஹரிஜனங்களின் நிலை உயரலாயிற்று. இவ்விதம் காந்திஜியின் கொள்கை நிர்மாண ரூபத்தில் நாட்டில் நிலைபெற்றுவிட்டது.

இதற்கு பதிலாக லீக்கின் பாகிஸ்தான் கிளர்ச்சியை எடுத்துக்கொள்ளுங்கள். லீக் ஒரு கோஷத்தை கிளப்பிற்று. அதில் ஹிந்துக்களின் மீது வெறுப்பும் எதிர்ப்பும் தவிர நிர்மாண நோக்கமோ உயரியதத்துவமோ இருக்கவில்லை. முஸ்லிம்கள் எம்மாதிரி வாழ்க்கையை மேற்கொள்வது; எந்த அடிப்படைகளின் பேரில் தங்கள் அறிவு, சிந்தனைகளை சீர்செய்வது, எவ்வழிகளில் வளர்ச்சி யடைந்து முன்னேறுவது; என்ற உபாயங்களை அந்தக்கோஷம் காட்டவேயில்லை. அதன்விளைவாக பாகிஸ்தானிலும் சரி இந்திய முஸ்லிம்களுக்கும் சரி நிர்மாண சிந்தனை இல்லை.

காந்திஜியின் நிர்மாணக்கொள்கை நாட்டை விடுவித்திருக்கிறது. ஆனால் இன்று ஹிந்து சகோதரர்களில் நிர்மாண உணர்ச்சிகுறைந்து வருவதைப் பார்த்து வருந்துகிறேன். ஆங்கில அரசியல் சூழ்ச்சியால் இன்று காங்கிரஸுக்கு எதிராக 'ஹிந்து ராஜ்ய' உணர்ச்சி ஹிந்துக்களில் ஏற்பட்டிருக்கிறது ஹிந்துக்களின் தவறான போக்கால் காங்கிரஸ் சர்க்காருக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டால் 1914-ல் அரபியர்கள் அடைந்த கதியே இந்தியர்களும் அடைய வேண்டியிருக்கும். இந்தியாவில் பலம்வாய்ந்த ஆட்சியமைக்க முடியாமல் போய்விடும். ஹிந்துக்கள் முஸ்லிம்கள் மற்ற எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து நேரு சர்க்காரை மேலும் பலப்படுத்த வேண்டும். அதில்குறைகளிருந்தால் அதைப்போக்க முயலவேண்டுமே யொழிய எதிர்ப்பது சரியல்ல. ஒருபக்கம் நேரு சர்க்காரை பலப்படுத்திக்கொண்டே இன்னொருபக்கம் மூன்றாவது யுத்தத்தில் இந்தியா நடுநிலைமை வகிக்கும்படிப் பார்த்துக்கொள்வது ஹிந்துக்களின் திறமையாகவே கருதப்படும்.

சேவக் சங்க நண்பர்கள் தவறாக கிளர்ச்சியை ஆரம்பித்திருக்கிறார்கள். நாட்டின் கவுரவத்தை உயர்த்துவதே தங்கள்நோக்கமென்பதை தங்களுடைய போக்கால் சர்க்காருக்கு நிரூபித்துக் காட்டுவதே அவர்களுக்கு சரியானவழி இஸ்லாமின் பெயரைச் சொல்லி அமைக்கப் பட்ட பாகிஸ்தானின் அழிவைப் பார்த்தாய்விட்டது. ஹிந்து ராஜ்ய கோஷம் நேரு சர்க்காருக்கு மட்டுமின்றி நாட்டுக்கே தீங்காக முடியும் ஹிந்துக்கள் தீர்க்க தரிசனத்துடன். நடந்து கொள்ளவேண்டும்.

1914-யுத்தத்தில் துருக்கிக்கு எதிராக அரபியர்களை இஸ்லாமிய ஆட்சியின் ஆசை காட்டித் தூண்டி விட்டு பிறகு இந்திய முஸ்லிம்களைக் கொண்டு தோற்கடித்த ஆங்கிலேயர்கள் கடைசியில் அரபியர்களை சிறு சிறு கோஷ்டிகளாக சிதறடித்து விட்டனர். நம்பியிருந்த ஷரீப் ஹுஸைன் பாதுகாப்பு கைதிபோலிருந்து இறந்தார். இன்று யூதர்களை யெதிர்க்கவும் முடியாத நிலைமையில் அரபியர்கள் சக்தியற்றிருக்கின்றனர். அதாவது முஸ்லிம்களின் கடைசி ராஜ்யத்தை முஸ்லிம்களைக் கொண்டே ஆங்கிலேயர்கள் அழித்தார்கள். அதேபோல் இன்று நாட்டை விடுவித்த காங்கிரசுக்கு எதிராக சேவ சங்கம் முதலிய ஹிந்துக்களின் அநேக ஸ்தாபனங்கள் வேலை செய்கின்றன. அதனால் நாட்டுக்கு அளவற்ற நஷ்டமே யேற்படும்.

இன்று லீக் மெம்பர்கள் முஸ்லிம் சட்டத்தின் பாதுகாப்பு என்று அரசியல் நிர்ணய சபையில் கூச்சல் போடுகின்றனர். உண்மையில் அவர்கள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து ராஜிநாமா செய்து வெளியேறி யிருந்தால் புத்திசாலித்தனமா யிருந்திருக்கும். பாகிஸ்தானில் தேசீய, காங்கிரஸ் வாதிகள் இருப்பது சகிக்கப்படாமல் பெரிய பெரிய காங்கிரஸ் தலைவர்கள் சிறை கூடங்களில் கிடந்து வாடிக்கொண்டிருக்கையில் இந்தியாவில் மாத்திரம் லீக் மெம்பர்களை எப்படி சகிக்க முடியும். லீகர்கள் இந்திய முஸ்லிம்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு முஸ்லிம்களுக்கு நன்மை தரத்தக்க ஒன்றும் சாதிக்க முடியாதென்பது நிச்சயம். கடந்த காலத்தில் தங்களை எதிர்த்து வந்தவர்களின் பேச்சை சபையிலுள்ள ஹிந்து மெம்பர்கள் எப்படி ஒப்புக்கொள்ளக் கூடும். லீக் மெம்பர்கள் வெளியேறி தேசீய முஸ்லிம்களுக்கு இடத் தக்காலிசெய்திருந்தால் காங்கிரஸ் முஸ்லிம்கள் சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தி யிருக்கமுடியும்.

முஸ்லிம்களைநோக்கி மௌலானா பேசியதாவது:- இந்தியாவில் இஸ்லாம் வளர்ச்சியடைய வேண்டுமென்று விரும்பினால் நீங்கள் இஸ்லாமிய பண்பாட்டை வளர்த்தாகவேண்டும். உங்கள் நடத்தையால் ஹிந்து, முஸ்லிம் என்றவேற்றுமையைப் போக்க வேண்டும். ஆண்டவன் சர்வ ரட்சகன். அவனுடைய அருள் அனைவருக்கும் பொது. உலகத்துக்கே அன்புருவாய் அவதரித்த முஹம்மது நபியவர்கள் இஸ்லாமிய பண்பாட்டை மக்களுக்கு பொதுவாக்கினார். இன்று அன்புக்கு பதிலாக வெறுப்பை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமை அமைப்பதற்கு நாம் யார்?

திருகுர்ஆனிலிருந்து ஒரு வாக்கியத்தை மேற்கோளாகக் காட்டி மௌலானா பேசியதாவது:- வீசும் காற்று பாயும் நதிகள், பெய்யும் மழை, விளையும் பொருள்கள் அனைவருக்கும் பொதுவானது. ஆண்டவனுடைய கடாட்சத்துக்கு ஹிந்து முஸ்லிம் என்ற பாதபாடில்லை. அவர் எல்லோரையும் சமமாகவே நடத்துகிறார். ஆனால் நமக்கு நன்மை செய்பவர்களுக்கே நன்மை செய்வதென்றும், நம்மை வெறுப்பவர்களை வெறுப்பதென்றும் நம்மை இழிவு செய்பவர்களை இழிவு செய்வதென்றும் நாம் செய்த முடிவு தவறானது இஸ்லாமுக்கு மாறான காரியங்களுக்கு சமமாக இஸ்லாமை எடை போட்டோம். நாமும் பெண்களுக்கு சொத்துரிமை கொடுப்பதில்லை; தோட்டிகள் தொட்டதை சாப்பிடுவதில்லை; அவர்களைத் தீண்டுவதில்லை; நம்மிடையே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடு; ஒரு நெசவாளி சையதுக்கு சமமானவனல்லவென்ற எண்ணம்; என்னதான் கற்றறிந்த குணசீலனாயிருப்பினும் நெசவாளிக்கு சையதுடைய மகளை கொடுப்பது கேவலமென்ற மனப்பான்மை; இதனால் இஸ்லாம் உருக்குலைந்து போய் விட்டது. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடே இஸ்லாமின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை போட்டிருக்கிறது

மனித உயர்ச்சிக்கு ஒழுக்கமே அளவுகோல் என்றும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மதத்தைப் பின்பற்றுபவர்கள் இன்று ஜாதீய மேம்பாட்டைச் சொல்லிப் பெருமை யடித்துக்கொள்ளுகின்றனர். ஜாதீய உயர்வு தாழ்வுகளையும், தீண்டத் தகுந்தவன் தகாதவன் என்ற பாகுபாட்டையும் தகர்ப்பதற்காக வந்த மதத்தைச் சேர்ந்தவர்களே மதத்தின் உயரிய போதனையை மறந்துவிட்டது துரதிர்ஷ்டமாகும். இஸ்லாமின் உண்மையான போதனைகளை எண்ணி முஸ்லிம்கள் விழிப்படையவில்லையேல் வருங்காலம ஜாதீய, பொருளாதார போலிக் கவுரவங்களை தகர்த்தே தீருமென்பது நிச்சயம். அதற்கு முன்பே முஸ்லிம்கள் வேற்றுமைகளைப் போக்கிவிடுவது இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் செய்யப்படும் சேவையாகவே யிருக்கும்.

## ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா தொகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.
அதை ஆதரிப்பது உங்கள் தேசீயக்கடமை.

**மானேஜர், ஆஸாத். குடந்தை.**

# மதம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

இந்துக்களும், முஸ்லிம்களும் வெவ்வேறு மதத்தை அனுஷ்டிக்கிறார்களென்பதும், அவர்களுடைய சமூகவாழ்வு முறை அம்மதங்களிலிருந்து கிடைத்தது என்பதும் உண்மை. அவர்களுடைய சடங்குகளும், பழக்கங்களும் வெளித்தோற்றத்தில் மிகவும் மாறுபட்டு ஒன்றுக்கொன்று ஒவ்வாதனவாகவும் தோன்றுகின்றன.

ஒரு மதத்தின் பல உட்பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் அமைதியாக இதமாக ஒரே தேசத்தினராக வாழக்கூடும். அந்த மத உட்பிரிவினிடையே எவ்வளவு வேறுபாடுகள் இருக்குமோ அதைக்காட்டிலும் அதிகமாக இந்துமுஸ்லிம் மத வேற்றுமைகள் இல்லை. முஸ்லிம் மசூதிக்குள் கடுமையான எளிமை நிலவுகிறது. தொழுகைப் பாய்களும், தண்ணீர் பானைகளும்தான் அங்கு காணலாம். இதற்கு நேர்மாறானவை இந்துக் கோயில்களின் அலங்கார விக்கிரகங்களும், பூசனை முறைகளும், இவைகளுக்குள்ள வேறுபாடு, புரோடெஸ்டண்டு அல்லது பிர பிட்டேரியன் மாதா கோவிலுக்கும் ரோமன்கத்தோலிக்க மாதாகோவிலுக்கு முள்ளது போன்றதே; வேறல்ல. புரோடெஸ்டண்டு கோவிலில், தொழுபவர்களுக்கு இருக்கைகளும், போதகருக்கு மேடையுமிருக்கும் கத்தோலிக்கர் கோவிலில் பிரமாத அலங்காரங்கள், விக்கிரகங்கள், வர்ணச் சித்திரங்கள், மெழுகு வர்த்திகள் இன்னும் எத்தனையோ உண்டு. முஹர்மதியர்களிடையிலும் கூட, வைராக்கியமுள்ள சூனி வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஷியா வகுப்பினருடைய மொஹரம் ஆடம்பரக் கொண்டாட்டத்தை, இந்துக்களுடைய துர்க்கா பூஜை விழாவை வெறுப்பதுபோல வெறுக்கிறார்கள். இருப்பினும், இங்கிலாந்தின் புரோட்டெஸ்டண்டுகளும் கத்தோலிக்கரும் அல்லது சூனிகளும் ஷியாக்களும் வெவ்வேறு தேசீய இனத்தைச் சேர்ந்தவர்களென்று யாரும் உரிமை கொண்டாடவில்லை. ஹிந்துக்களிலும்கூட கோயில், குளம், மதச் சடங்குகள், அனுஷ்டானங்கள் எல்லாவற்றையும் கண்டிக்கிறவர்கள் இருக்கிறார்கள், எனினும் அவர்கள் ஹிந்துக்களென்றே யழைக்கப்படுகிறார்கள்.

மதத்தினுடைய வெளி அடையாளங்கள், சின்னங்கள், சடங்குகள், விசேஷங்கள், அனுஷ்டானங்கள் ஒருபுறம் இருக்க ஜனங்கள் தத்துவஞானிகளை நன்கு அறிந்திருக்கின்றனர். அத்தத்துவ ஞானிகள் வாழ்வு, சாவு, சாவுக்குப்பின் வாழ்வு என்பதைப் பற்றிய நுட்பங்களைக் கண்டவர்கள் கடவுள் ஒருவரே, ஆன்மா அழிவற்றது, உலகபொருள்கள் ஒன்றுஞ் சதமல்ல ஆத்மீக விஷயங்களே நித்தியமானவை என்ற உண்மைகளை அவர்கள் போதித்திருக்கின்றனர். ஹிந்துக்களின் வேதாந்தத்தத்துவமும், முஸ்லிம்களின் சூபிக் கொள்கையும் ஒரு முடிவிற்கே வருகின்றன. நித்திய உண்மையை நாடி மனித ஆன்மா செய்யும் முயற்சியனுபவத்தில் எய்திய மேலாம் உணர்ச்சியை, இவை யொன்றிருந்தொன்று பெற்றனவோ தெரியவில்லை. இருமதக் கிரந்தங்களிலும் நன்கு கற்றுணர்ந்த டாக்டர் பகவன்தாஸ் போன்றவர்கள், இருவகை உயர்ந்த நூல்களிலுமிருந்து ஒரே கருத்துள்ள பகுதிகளைச் சுலபமாகத் திரட்டிக் கொடுக்க முடியும்.

‘முஸ்லிம் ஆன்மஞானத்தின் மூன்வருது பிறப்பிடம் இந்தியா. முந்திய அதிகாரமொன்றில், இந்தியாவும் பாரசீக வளைகுடாவும் நெருங்கிய வியாபார உறவுகள் கொண்டிருந்தன என்பது காட்டப்பட்டது. வியாபாரத்தோடு, சந்தேகமில்லாமல், கருத்துக்களும் பரிமாறப்பட்டன. இந்திய எஃகு, வாள், பொன், விலையுயர்த கற்கள் பாரசீகம், ஈராக்கிற்குச் சென்றன. வர்ணந்தீட்டிய ஆர்ச்சு, டூம், கோபுரங்கள் முதலிய சிற்பக்கலைப் பொருள்களும் அந்நாடுகளுக்குச் சென்றன. அதுபோல இந்தியத் தத்துவ உண்மைகளும் அங்கு சென்றன என்பதும் ஒப்புக்கொள்ளக்கூடியதே பாஸ்ராவில், அதி உமாயதுகளிடம் இந்தியர்கள் உயர்ந்த வரவு செலவு நிர்வாகப்பகுதிகளில் அமர்ந்திருந்தனர். கலிபாமுவாவியாசிரியாவில் அண்டியாக், ஹஜ்ஜாஜ், காஷ்கர் முதலிய இடங்களில் இந்தியர்களைக் குடியேற்றினர். மாநிறமும் கருங்கண்களுமுடைய இந்தியர்கள், கலிபாவினுடைய முக்கிய நகரங்களில் முஸ்லிம்களோடு கலந்து வாழ்ந்தார்கள் சாம்ராஜ்யத்தின் கிழக்கு ராஜ்யங்களான கோராசான், ஆப்கனிஸ்தான், சிஸ்டான், பலுசிஸ்தான் முதலிய பகுதிகள், மதமாற்றப்படுவதற்கு முன்பு புத்தமதம் அல்லது ஹிந்து மதத்தைச் சேர்ந்திருந்தன. பால்க்கில் ஒரு புத்த விஹாரம் (மடம்) இருந்தது. அதன் தலைவர் பாரமாக். அவருடைய வமிசத்தார், பின்னால் அப்பாஸைது கலிபாக்களுடைய பார்மாக்கைடு மந்திரிகள் எனப்பட்டன.

‘ஆதிகாலத்திலிருந்து அராபியர்கள் இந்திய இலக்கியங்களையும், விஞ்ஞானங்களையும் பயின்றார்கள். புத்தமத நூல்களை ஹிஜிரா இரண்டாவது நூற்றாண்டில் மொழிபெயர்த்தார்கள் அவைகளிற் சில: கிதாபல்-புத் பிலவ்ஹர்வாபுடாசிப், வான நூல் மருத்துவ நூல் சிந்த் ஹிந்த் (சித்தாந்தம்), ஷுஷ்ருத் (சுஸ்ருதம்), ஸ்ராக் (சாரகப), காலிளாதாம்னா (பஞ்ச

தந்திரம்), கிதாப் சிந்தாபாத் போன்ற கதைகள், அற நூல்கள், ஷானக் (சாணக்கியம்) பித்பா (இதோபதேசம்), தர்க்கநூல், ராணுவ நூல்கள் முதலியனவாம்.

'அவர்கள் எந்த மக்களோடு பழக நேர்ந்ததோ அவர்களுடைய பழக்க வழக்கங்கள், விஞ்ஞானம், மதங்கள் எல்லாவற்றையும் வெகு சிரத்தையோடு அறியலானார்கள். அல்-கிந்தி என்பவர் இந்திய மதங்களைப்பற்றி ஒரு நூல் எழுதினார். சுலைமானும், மாசூதியும் தங்கள் பிரயாணத்திலறிந்த விஷயங்களைத் தங்களுடைய நூல்களில் எழுதிவைத்தார்கள். அல்-நாடிம், அல்-அஷாரி, அல்பிரூனிஷாரஸ்தானி போன்றவர்கள் இந்திய மதங்கள், தத்துவ முறைகளைப்பற்றித் தங்களுடைய புத்தகங்களில் ஏராளமாக எழுதியிருக்கிறார்கள்.

'புத்த சரித்திரம் முஸ்லிம் இலக்கியத்தில் ஒரு சாதுவின் சரித்திரம் போல நுழைந்திருக்கிறது. முஸ்லிம் பக்த சரித்திர நூலார், இபின் ஆதாம் கதைகளைப் புத்த சரித்திரத்தைப் போலாக்கியிருக்கிறார்கள். இருவரிருவராக ஓரிடத்தில் இரண்டு இரவுகளுக்கு மேல் தங்காமல் சுற்றித்திரிகின்ற இந்திய சாதுக்களை முஸ்லிம் அறிஞர்கள் நன்கு அறிவார்கள். அவர்களிடமிருந்து அகத்தூய்மை, புறத்தூய்மை சத்தியம், வறுமை என்ற நான்முக விரதங்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள். அதோடு ஜபமாலையும்கூட. நிர்வாணக்கருத்து, எண்வகை விரதங்கள், யோகப் பயிற்சி, மந்திர சக்திகள் முதலியனதான, தாரிகா அல்லது சாலுக், மொராக்காபா, காராபாத் அல்லது முஜிஸா என்ற பெயரால் எடுத்துக்கொள்ளப்பட்டன'

'ஆனால், தன்னுடைய மிகத்துணிச்சலான கொள்கைகளால், இஸ்லாமிய உலகத்தில் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கியவர் ஹுசேன்-பின்-மன்சூர் அல்-ஹல்லாஜ்.......அவர் இந்தியா உள்பட அநேக நாடுகளில் பிரயாணம் செய்தார். மெக்காவுக்கு மூன்று முறை சென்றிருக்கிறார். அவருடைய காரியங்கள் மிகவும் தீங்குடையனவாக இருந்ததால், அவர் கி. பி. 922-ல் கைது செய்யப்பட்டார்.

கபீர், தாது, நானக் இன்னும் அநேக சாதுக்கள் முஸ்லிம் சூபிகளின் பாஷையையே உபயோகித்தார்கள்.

இபின்-அல் அராபி, அப்துல் கரீம் ஜீலி முதலியோர்களுடைய நூல்களில், மன்சூரின் கொள்கைகள் விவரிக்கப்பட்டிருந்தன. இபின்-அல்-பரீத், அப்ரீசையது இபின் அபுல் காயர் ஆகியோரின் செய்யுள்களில் அதே கருத்துக்களிருந்தன. இவை இந்தியா உள்படத்தொலை நாடுகளுக்கும் பரவின.

'ஜீலி இந்து மதத்தை அறிந்திருந்தார். அவர் குறிப்பிட்டிருக்கும் பத்து முக்கிய மதங்களில் பிரஹ்மா (பிரமன்) வும் ஒன்று. அதைப்பற்றி அவர் குறிப்பிடும் பொழுது, பிரமனைத் தொழுகிறவர்கள் கடவுளை அவருடைய முழுத்தன்மையில் வைத்து வணங்குகிறார்களென்றும், தீர்க்கதரிசியோ அல்லது தெய்வ தூதரோ அவர்களுக்கில்லையென்றும் கூறுகிறார். பிராமணவேத நூல்கள் கடவுளால் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டன அல்ல; தெரிவித்தது ஆப்ரகாம் (பிரஹ்மா) தான் என்பது அவர் கருத்து. அவ்வேதங்கள் ஐந்து நூல்களில் அடங்கின. ஐந்தாவது நூல் மிகுதியும் நுட்பமான விஷயங்களையுடையதால், பெரும்பாலான பிராமணர்களுக்குத் தெரியாது. அதைத்தவிராது படித்தவர்கள் முஸ்லிம்களானார்கள். ஜீலி குறிப்பிடுகின்ற ஐந்தாவது புத்தகம் வேதாந்தம். அது ஒருமைப்பாட்டைப் போதிப்பதால் அதுதான் இஸ்லாம் என்று ஜீலி நினைக்கும்படியாயிற்று.' இரண்டறக் கலப்பதில் (பானு) ஐக்கியத்தை (வாஸ்ல்) நாடுகின்ற முஸ்லிம் ஞானிக்கு ஆன்ம குரு வேண்டும். "ஏனென்றால், ஆசான் இல்லாதவனுக்குச் சாத்தானே இமாம்." வழிகாட்டுபவர் அல்லது ஆசான், (பீர் அல்லது ஷேக்) சூபிக் கொள்கையின் நடுநாயகமான மதகுரு.......தனது முர்ஷீதை எப்பொழுதும் மனத்தில் வைத்துப் போற்ற வேண்டுமென்று சிஷ்யனுக்கு உபதேசிக்கப் படுகிறது இடைவிடாச் சிந்தனையினாலும், தியானத்தாலும் அவரையன்றி வேறொன்றும் நினைக்கக்கூடாது. எல்லா மனிதர்களிலும், எல்லாப் பொருள்களிலும் அவரையே காணவேண்டும். முர்ஷீதில் தன்னழிவு பெறவேண்டும், முர்ஷீதில் தான் முற்றிலும் கலந்துவிடும் நிலையிலிருந்து, பக்தனைப்படிப்படியாக இட்டுச்சென்று, இறுதியில் இறைவனிடம் சேர்ப்பிக்கிறார். ஞானகுரு மஹமது இறைவனிடம் (இஸ்லாம்) சரணடையக் கற்பித்தார் சூபி மதம், இறைவனின் மண்ணுலகப் பிரதிநிதியான குருவிடம் சரணடையக் கற்பிக்கிறது.

ஹாஜிவாரிஸ் அலிஷா வட இந்தியாவில் ஒரு சூபி சாது. அவருடைய சமாது, ஐக்கிய மாகாணத்தில் பாராபாங்கி ஜில்லாவில், தீவா ஷாரிப்பில் இருக்கிறது. அவருடைய சிஷ்யர்கள், "வாரிஸி" என்ற சொல்லைத் தங்களுடைய பெயர்களோடு சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் ஏராளமானவர்கள் என்று சொல்லப் படுகிறார்கள். அவர் சூபி மதக் கொள்கைகளைப் பாரசீகப் பாட்டுகளில் சுருக்கமாகப் பாடியிருக்கிறார். அதை உதாரணமாகக் காட்டலாம்:-

முன் ஹாமீன் கோயெம் கீ பீர் - ஏ - மான் குதாஸ்த்
பேஷ் ஏமுன்கீர் ஈன் சாகுன் குப்டான் காதாஸ்த் ;
ஏக் சவாலே மீன் குனும் அய் மார்மோன்,

பாஸ் ஜவாப் ஊரா தேஹூந்த் அய் மோமீனன்

ஹேஸூம் அந்தர் நார் சூன் ஷூத் சோக்தா
ரிஷ்தா அந்தர் ஜாமே ஷூத் சூன் தோக்தா

பாஸ் வாரா ஹேஸம் பா கோ யெம் யா கே நார்
ரிஷ்தா ரா ஜாமா பாகோ யெம் யா கா தார்

சூன் கே பீர் - யே - முன் பானு பில்லா ஷூத்
ருப்த் பாஷ்ரியாத் ஹாமா அல்லா ஷூத்

பாஸ் பே பாயி ஊ குனும் ஹார்தம் சாஜூத்,
வாக்ப் கார்டம் தார் ராஹூஷ் ஜான் ஒ வாஜூத்

அஸ்கி அஸ் ஜூப்லே ஆலம் பார்ட்டார் அஸ்த்
ஸான் கே யீன் கில்லாத் அஹூதாய் அக்பார் அஸ்த்.

மொழி பெயர்ப்பு:- பீர் எனது கடவுள் என்று சொல்லுகிறேன். இதை முன்கிரீனிம் (நம்பாதவர்) சொல்லுவது குற்றமாகும். ஏ மனிதனே! ஒரு கேள்வி கேட்கிறேன் நம்புகிறவர்களே! இதற்குப் பதிலளியுங்கள். விறகு தீயில் எரிந்த பிறகு, நூல் துணியில் செய்யப்பட்ட பொழுது அதை நான் விற கென்று சொல்வதா தீயென்று சொல்வதா? அதைத் துணியென்று சொல்வதா நூலென்று சொல்வதா? அதுபோல என்னுடைய பீர் கடவுளில் மறைந்த பொழுது மனிதப் பிறப்பு மறைகிறது - எல்லாம் கடவுளாகிறது. ஆகையால், நான் ஒவ்வொரு வினடியும் அவருடைய பாதங்களை வணங்குகிறேன். அவருடைய வழிக்கே என்னையும் என்னுயிரையும் ஆக்கிவிட்டேன். எவ்வளவுக்கெவ்வளவு சர்வேசுவரான கடவுளிடத்துச் செலுத்தப்படும் பக்தியாக அன்பு இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது எல்லா உலகத்திற்கும் மேலானது.

குரு அல்லது ஆசானின் அவசியம்பற்றி இந்து மத நூல்களும் அதிகமாகக் கூறுகின்றன. கடினமான நேன்புகளுக்கிடையே அவர்தான் வழி நடத்தக்கூடும். அவரில்லாமல் ஆன்ம வளர்ச்சி யென்பது நடக்காத காரியம். உண்மையில் 'குருவே பிரமா குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரன், குருவே பரப்பிரமம். அந்த குருவை நான் வணங்குகிறேன்.' என்பது சாதாரணத் தினசரிப் பிரார்த்தனை. ஒரு குருவை அடைந்து, அவரிடம் ஞானோபதேசம் பெற வேண்டுமென்பது ஒவ்வோர் ஹிந்துவின் கடமையும் ஆசையுமாகும்.

'கபீரின் பாந்தாவில் (பிரிவிலும்,) சூபி மதப் பிரிவிலுள்ளதைப் போல் குருவுக்கு உயர்ந்த ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது "கடவுளை வணங்குவது மனிதனை வணங்குவது போன்றதுதான்" என்பது சூபிகளுக்கு உண்மையானல், அது இங்கும் பொருத்தமாகிறது. கபீர் சொல்லுகிறார்........

'குருவைக் கோவிந்தனாக (கடவுளாக) மதி.'

அதற்கும் மேலாக :-

'ஹரி கோபித்தால் உய்வுண்டு. குரு கோபித்தால் உய்வேயில்லை. சூபி மதத்தில் போல் கபீர் பாந்தாவிலும் உள்ளது :-

'உண்மையான தியானம் (திகர்) குருவின் உருவம்தான். உண்மையான வணக்கம் குருவின் பாதங்களுக்கே. உண்மையான தோணி குருவின் திருநாமம். மூன்று உலகங்களிலும், ஒன்பது மண்டலங்களிலும் குருவைக் காட்டிலும் சிறந்தவர்கள் கிடையாது.

'சூபிகளைப்போல நானக்கும், ஆன்மா இறைவனை நோக்கிச்செய்யும் பிரயாணத்தில் கடவுளால் வழிகாட்டப் படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார் அவருடைய போதனையிலும் கபீருடைய போதனையில் போல குரு உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கிறார்.'

கபீர், நானக் என்ற இருவரும், இஸ்லாம் இந்து வேதாந்தம் ஆகிய இரண்டினாலும் உருவாக்கப்பட்டவர்கள் என்றே வட இந்தியர்களுக்குத் தோன்றுகிறார்கள். எண்ணற்ற இந்து வீடுகளில், காலை மாலைப் பிரார்த்தனையின்போது ஏராளமான ஹிந்துக்கள் கபீரின் பக்திப்பாடல்களையே பாடுகிறார்கள்.

'இந்த விதமாகக் கபீ இந்தியாவின் கவனத்தை பொதுநெறிச் சமயமொன்றில் திருப்பினர். இரு சாராரும் நடக்கக்கூடிய பொதுப்பாதையொன்றை வகுத்தார். இத்தகைய மதத்திற்கு இந்துவோ முஸ்லிமோ யாரும் தடை சொல்லமுடியாது. அவருடைய சேவையில் இது ஆக்கப்பகுதியாகும். அதில் அழித்தற் பகுதியும் உண்டு. பழமையான பாதையில் வளர்ந்த காட்டை அழிக்காமல் புதிய பாதையை அமைப்பது முடியாத காரியம் ஆகவே, அஞ்சுதலற்ற வெஞ்சினத்தோடு ஈட்டியெனப் பாயுஞ் சொற்களினுல், உண்மையை மூடிமறைக்கின்ற புறச்செயல் கருவிகளைனைத் தயும் தாக்கினர். இந்திய மக்களைப் பிரித்துவைக்கும் கொள்கைகளைக் கண்டித்தார். இந்த விஷயத்தில் இந்துவையும் விட்டுவைக்கவில்லை. முஸல்மானையும் விட்டு வக்கவில்லை.

'புத்தர் முதலான சீர்திருத்தவாதிகள் எவைகளை விட்டுவிடும்படியாகக் கூறினர்களோ அவைகளை விட்டொழிக்கும்படி கபீரும் வற்புறுத்தினர். அவையாவன :— மதச் சடங்குகள், பலி யிடுதல், மந்திர சக்திகளில் மோகம், வாய் வேதாந்தம், அனுஷ்டானங்கள், தீர்த்த யாத்திரகள், பட்டினிகள், சிலை வணக்கம், சாமிகள், அம்மன்கள் பிராமண ஆதிக்கம், ஜாதி வித்தியாசங்கள், தீண்டாமை, உணவுகளைப் பற்றிய ஆசார தோஷங்கள்............முஸ்லிம்களுடைய ஒட்டாத தன்மை, ஒரே நபியிடத்திலும் ஒரே நூலி

# தமிழர்களுக்கு ஹிந்தி அவசியமா?

—( 'மாமல்லன்', கம்பளை )—

தலையங்கத்தின் கேள்விக்குறி பொதுவாக நம்மவர்களின் பிரச்னையே யெனினும் ஒருசில எதிர்ப்பாளர்களின் கற்பனை மதிலென்றே சொல்லவேண்டும் சிறுபான்மை ஹிந்தி எதிர்ப்பாளருக்கும் பெரும்பான்மை ஹிந்தி ஆதரிப்பாளருக்கும் மத்தியில் நம் தமிழ்ச் சமூகம் தத்தளிக்கும் இன்னாளில் மதில்மேல்பூனையாக இருந்துவிடாமல் சமூகத் தலைவர்கள் ஆக்க வேலைகள் செய்யவேண்டியது அவசியத்தின் மேல் அவசியமாகும்.

தனையீன்ற தாய், தான்பிறந்த நாடு, தான் பேசும் பாஷை இவை மூன்றையும் எவனொருவனும் வெறுக்கவோ, புறக்கணிக்கவோ இயலான். அந்நிலையில் பிற பாஷையில் பரிச்சயம் நம்மவர்க்கு ஏற்படுவதால் தாய் பாஷை அடியோடு ஒழிந்து போகுமென்பதில் அர்த்தமில்லை. ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்தில் ஆங்கிலம் உலக பொது பாஷையாகவும் ராஜாங்க பாஷையாகவும் விளங்கிற்று. இன்னும் விளங்குகிறது. ஆங்கிலம் தெரிந்த ஒருவன் அகில உலகத்தையும் பிறர் உதவியின்றி சுற்றிவர இயலும், ஆங்கில பாஷையின் மோகம் நம்மவரை அந்தஸ்திலும் அறிவிலும் மேம்படச் செய்திருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

சுதந்திரமடைந்தபின் நப்தேசத்தின் நிர்வாகம், நீதி, நெறியாவும், ஒரு பொதுபாஷையால் நிர்வகிக்கப்பட வேண்டியதவசியம் நம்தேசம் உலகத்திலே எல்லாத் துறையிலும் முதல் ஸ்தானம் பெற்றதுபோல் பாஷைகள் விஷயத்திலும் முதல் ஸ்தானமே பெறுகின்றது ஏனெனில் அறுபது பாஷைகளுக்குக் குறையாமல் பேசப்பட்டும் பதினைந்து பாஷைகள் எழுதப்பட்டும் வரும் நம் பாரத தேசத்தைப்போல் உலகில் எந்த நாடும் இல்லையென்றே சொல்லலாம். இவைகளில் ஹிந்தியே பெரும்பான்மை மக்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது. இந்நிலையில் நம்பொறுப்பு வாய்ந்ததலைவர்கள் ஹிந்தியை ராஷ்ட்ரீய பாஷையாகத் தேர்ந்தெடுத்ததில் வியப்பொன்றுமில்லை.

ஹிந்தியின் மூலம் நம் தாய்மொழி வளர்ச்சியடைந்திருக்கிறதென்பது கண்கூடு. தமிழனின் கற்பனைக் கெட்டாத கைவல்யங்கள் ஹிந்தி சிந்தனையாளர்களின் கைங்கர்யத்தின் பிரதிகள் மூலம் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. இதேபோல் தமிழனும் அவர்களுக்கு எண்ணற்ற கற்பனா சக்திக்கும் அப்பாற்பட்ட கவித்திரனை மொழி பெயர்ப்பின் மூலம் அளித்திருக்கின்றான்.

நம் தமிழ் வேதம் நம்மை நமக்காக வாழச் சொல்லவில்லை. பிறருக்காகவே வாழச் சொல்லியும், வாழவும் செய்திருக்கிறது. பிறபாஷையின் இலக்கிய காவியங்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டும். நம் சிந்தனைகளை பிறருக்கும் பயன் படும்படி செய்ய வேண்டும். இவையெல்லாம் செய்வதற்கு நமக்கென்று ஒருபொது பாஷை வேண்டுமல்லவா? நன்கு

---

லும் உள்ள குருட்டு நம்பிக்கை, வெளிக் காரியங்களான மெக்கா யாத்திரை பட்டினிகள், வேளாவேளை தொழுகைகள், அவுலியா, பீர் முதலிய சாது வணக்கம், ( பைகம்பர் ) தீர்க்க தரிசி வணக்கம் முதலியவைகளைக் கண்டிக்கிறார்.'

'எல்லா உயிர்களையும் மதிக்கும் படியும் கொலை செய்யாதிருக்கும்படியும் ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் அவர் கேட்டுக்கொள்கிறார். பிறவி அல்லது பதவியினால் வரும் செருக்கறுக்க வேண்டுகிறார். துறவிலாயினும் உலக வாழ்விலாயினும் எல்லை மிஞ்சிப் போவதை விட்டுவிடும்படி கூறுகிறார். வாழ்வை அற்பமாகக் கருத வேண்டுகிறார் ........ இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே குலத்தவர், ஒரே இறைவனைத்தான் வணங்குகிறார்கள், ஒரே தந்தையின் மைந்தர்கள், அவர்கள் ஒரே இரத்தத்தால் ஆனவர்கள் என்பதை அவர் திரும்பத் திரும்பக் கூறுகிறார்.'

'குரு நானக்கின் முழு உபதேசங்களும், இரண்டு மதங்களின் அடிப்படைக் கொள்கைகளின் சாராம்சம் தான் என்பதை யாவரும் அறிவர்.' இந்துவையும் முஸ்லிமையும் ஒன்றுபடுத்துவதே நானக்கின் சேவை சேவையாக இருந்தது. சமூகத்தின் காயங்களை ஆற்றுவதற்கு மதப் போராட்டங்களை நிறுத்த வேண்டுமென்பதை உணர்ந்தார்.' 'நானக், தனக்கும் இரக்கங்காட்டுவதில்லை. பிறத்தியாரிடமும் அவர் மேன்மையாக நடந்துகொள்பவரல்ல உறுதியும் தெளிவும் கொண்ட மனத்தோடு, நன்மை தீமைகளை நுணுக்கமாக உணர்ந்து, இந்து இஸ்லாம் மதங்களிலுள்ள மூட நம்பிக்கைகள், வெளி ஆசாரங்கள் முதலியவைகளை வன்மையாகக் கண்டிக்கிறார்' கபீர், பிறப்பில் முஸ்லிம்; நானக், பிறப்பில் இந்து இஸ்லாம் இந்து மதங்கள் பிரிந்து நிற்பவை, விலகி யொதுங்கி நிற்பவை என வெளித் தோற்றத்திலிருப்பினும், இவ்விரு மதங்களும் ஒன்றுபட்டதின் விளைவாக முளைத்தவர்களே கபீரும் நானக்கும். (தொடரும்)

இந்திய பிரிக்கப்பட்டால்.........

—பாபு ராஜேந்திர பிரஸாத்

சிர்தூக்குங்கால் ஹிந்தி அவசியம் கற்றேயாகவேண்டுமென்று தோன்றுகிறது. ஹிந்தியை யெதிர்க்கும் கூட்டம் ஆங்கிலத்தை மோகிப்பதேனென்று தெரியவில்லை. இப்போன்றோரின் கூட்டம் வேளாண்மை நிலத்தில் உள்ள களை என்பதும் இக்களைகளை உரிய காலத்தில் பிடுங்கி எறிந்து நம் சமுதாய வேளாண்மையை காப்பாற்ற நாம் ஒவ்வொருவரும் கடமைப் பட்டவர்களாவோமென்பதும் உண்மையே.

ஒரு காலத்தில் முஸ்லிம் லீக்கர்கள் மதத்திற்கு ஆபத்து ஹிந்துக்களின் ஆதிக்கத்தினால் நாம் அழிக்கப்பட்டு விடுவோமென்று பறை சாற்றிய கோஷத்தில் பாமர முஸல்மான்கள் ஏமார்ந்து பரிதவிப்பதுபோல் நம் எதிர்ப்பாளர்களும் அதேமுறையைக் கைக்கொள்ளுவது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே சமுதாயம் ஒரு ஆட்டுமந்தைக்குச் சமம். அதை மேய்ப்பவன் கையில் தான் அவைகளின் க்ஷேமம் இருக்கிறது. நாம் தேர்ந்தெடுத்திருக்கும் தலைவர்களின்கையால்தான் தற்சமயம் நம் தலை விதி நிர்ணயிக்கப்படவேண்டும். ஓநாய் தின்று ருசி கண்டுவிட்டால் முழு மந்தைக்குமே ஆபத்து ஏற்படுமென்பதற்கையமில்லை.

தமிழன் தலை நிமிர்ந்து நடப்பவன். எத்தனையோ முறைகளில் தன் கீர்த்தியை நிலைநாட்டியவன் எதையும் உறுதியுடன் நின்று சமாளிக்கும் தன்மையுள்ளவன். தன் மாதாவைக் கொல்ல நினைக்கான். தன் மாதாவின் ஸ்தானத்தில் உள்ள பிறரையும் கௌரவிப்பவனும்கூட. அத்தகைய தமிழனை கோழைகளாக்க தோன்றியுள்ள சில எதிர்ப்பாளர்கள் கூட்டம் தன் சமூகத்திற்கே இழிவை உண்டுபண்ணும் தொழிலில் இறங்கியிருப்பது நகைப்பிற்கிடமேயாகும். அவர்களின் சக்தியற்ற கூச்சலின் பிரகாரமே நம் மாகாணத்தின் பொது பாஷை தமிழாகவே இருக்கவேண்டுமாயின் நம் ஆந்திர சகோதரர்கள் பிரிந்துதான் ஆகவேண்டும். பாஷா வாரியாக மாகாணம் பிரிக்கப்படின் நிர்வாகச் சிலவுகள் அதிகமாகுமேயொழிய வரவு அதிகமாகாது. மொழிப்போர் ஆரம்பமானதும் இயற்கையிலேயே ஒருவருக்கொருவர் வெறுப்பேற்பட்டு நம் சக்திகள் சிதறிவிடுமென்பதில் சந்தேகமில்லை.

எதிர்ப்பாளர்கள் விரிக்கும் வலையில் பூமிசாஸ்திர ரீதியில்லாது அனுபவ ரீதியில் பயனடையா மாணவர்கள் சிக்குகிறார்கள். தற்சமயம் இவர்களே மேல்படியார்களின் கருவிகள். மாணவனின் உள்ளம் மாசு மறுவற்றது. அது ஒரு புகைப்படக் கருவியேயென்று சொல்லலாம். அப்படியெடுக்கும் படம் தன்னை அழிக்கவும் கூடும் ஆக்கவும் கூடும். 'ஆரியர் சூழ்ச்சி, பிராமணன் ஒழிக, நம் தமிழ் வாழ்க' என்ற கோஷம் நிதான புத்தியுள்ள எவரையும் மயக்கிவிடாது பெரிய அறிவாளிகளும், பட்டதாரிகளும் பத்திரிகை வாயிலாக தமிழனையும், தமிழ் வேதத்தையும், குழிதோண்டிப் புதைக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆரியன் பேரில் வஞ்சம் தீர்த்தக்கொள்ளுவதாகப்பேசி தமிழனின் புலமையை மதியீனத்தினால் மடமையென்கிறார்கள். புலமையை மதியாத பதர்கள் தமிழனின் பண்பையும் பாட்டையும் எப்படிக் காப்பார்களென்பது ஒரே புதிராக இருக்கிறது.

எதிர்கால மன்னர்களாகவும், மாலுமிகளாகவும் நம் தேசத்திற்கு கடமையாற்றவேண்டியவர்கள் மாணவர்கள். இவர்களின் கல்விப் பாலில் விஷம் கலக்கப்பட்டால் அதையென்றும் மாற்றமுடியாதென்பதை மாணவர்கள் உணர்வார்களாக

எனவே தமிழனின் பெருமை ஓங்கவேண்டுமானால் தேசிய பாஷையான ஹிந்தி அவசியம் கற்கவேண்டும். இச்சகம் பேசி இன்னல் கொடுக்கும் எதிர் பாளர் எவராயினும் சத்தியப் போர் தொடுத்து நம் பெருமையை நிலைநாட்ட முற்படுவோமாக.

“போர்வாள்” என்ற பத்திரிகையின் 27-11-48 இதழில் குறும்புச் சித்திரம் ஒன்று பிரசுரித்திருக்கிறார்கள் அதே சித்திரம் டில்லியில் வெளியாகும்” சங்கர்ஸ் வீக்லி’’ என்ற பத்திரிகையினால் வெளியானதாக குறிப்பு எழுதபட்டிருந்தது அதில் மத்திய, ஐக்கிய, பீஹார் மாகாணங்கள் ஒன்றுசேர்ந்து ஹிந்தி தெரியாத மாகாணத்திற்கு பலவந்தமாக ஒரு பையனின் கால்களையும், கைகளையும், கட்டி “ஹிந்தி டானிக்” கொடுப்பதாக ஒரு சித்திரம். பலாத்காரம் அவசியமான இடத்தில்தான் இடம்பெறும். டானிக் சாப்பிட்டு உன் பலவீனத்தைப் போக்கிக்கொள்ளென்ற பெற்றோர்கள் கொடுக்க வந்ததை வேண்டாமென்றால், அவர்கள் பலாத்காரமாகத்தானே கொடுக்கவேண்டும் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தவர்களுக்கல்லவோ பிள்ளையின் அருமை தெரியும். டானிக் கொடுத்து பலவானாக்கி உலகில் ஒருதவப்புதல்வனாகத் திகழவேண்டுமென்பது அவர்கள் ஆசை. பலாத்காரம் செய்யாமல் எப்படிக்கொடுப்பதாம்! ஆகவே அந்த சித்திரம் மிகவும் பொருத்தமானதே யென்று தோன்றுகிறது. அதைப் பிரசுரித்த ஆசிரியருக்கு தமிழனின் வந்தனம் உரித்தாகுக.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam.
Edited and published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakom.